
ISBN : 978-81-685845-8-7

செந்தமிழறிஞர்கள்:108



குன்றக்குடி அடிகளார்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்




NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

அண்ணா நூற்றாண்டு நூலகம்
ANNA CENTENARY LIBRARY
DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/145-%E0%AE%95%E0%AF%81%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9F%E0%AE%BF-%E0%AE%85%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%95%E0%AE%B3%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_1925

செந்தமிழ்சிற்பிகள்

குன்றக்குடி அடிகளார் (1925 – 1995)



அறிமுகம்

குன்றக்குடி அடிகள் (11 சூலை 1925-15 ஏப்ரல் 1995) சமயம், இலக்கியம், மட்டுமன்றி பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர். குன்றக்குடி ஆதீனத்தின் மடாதிபதியாக இருந்தவர்.

பேச்சுக்கு நிகராக, எழுத்திலும் வல்லவரான அடிகளார், தம் வாழ்நாளில் ஏராளமான நூல்களை எழுதியதோடு, மணிமொழி, தமிழகம், அருளோசை முதலிய இதழ்களையும் நடத்தினார். அவர் ஆரம்பித்து, இன்றளவும் வந்துகொண்டிருக்கும் மக்கள் சிந்தனை, அறிக அறிவியல் ஆகிய இதழ்களும் குறிப்பிடத்தக்கன.

விருதுகள்

- தமிழ்நாடு அரசின் முதல் <u>திருவள்ளுவர் விருது</u> 1986ல் வழங்கப்பட்டது.
- <u>அண்ணாமலைப் பல்கலைக்கழகம்</u> கௌரவ டாக்டர் பட்டம் (D.Litt) 1989ல் வழங்கிச் சிறப்பித்தது.
- இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக்குழு, 1991ல் தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.

எழுதிய நூல்கள்

சமய இலக்கியங்கள்

- அப்பர் விருந்து, அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருவாசகத்தேன்
- தமிழமுது, சமய இலக்கியங்கள், நாயன்மார் அடிச்சுவட்டில், ஆலய சமுதாய மையங்கள் (தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது), நமது நிலையில் சமயம் சமுதாயம், திருவருட்சிந்தனை, தினசரி தியான நூல், குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை 16 தொகுதிகள்.

இலக்கியங்கள்

- திருவள்ளுவர், திருவள்ளுவர் காட்டும் அரசியல், திருவள்ளுவர் காட்டும் அரசு, குறட்செல்வம், வாக்காளர்களுக்கு வள்ளுவர் தொடர்பான அறிவுரை, திருக்குறள் பேசுகிறது, குறள்நூறு, சிலம்பு நெறி, கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம், பாரதி யுக சந்தி, பாரதிதாசனின் உலகம்,கவியரங்கில் அடிகளார் (கவிதைகள்), மண்ணும் மனிதர்களும் (தன்வரலாறு),அடிகளார் எழுதிய சிறுகதைகள், அறிவொளி இயக்கத்தின் மூலமாக மக்களைச் சென்றெய்தியது. சில நாடகங்களும் அடிகளாரால் எழுதப்பெற்று அரங்கேறியுள்ளன. அவரது இறுதிக்காலத்தில் <u>தினமணியில்</u> எங்கே போகிறோம்? என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதி வந்தார்.

(😊)(😊) &&&&& (😊)(😊)

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AF%81%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9F%E0%AE%BF_%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B5%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%A3%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%B2%E0%AF%88_%E0%AE%86%E0%AE%A4%E0%AF%80%E0%AE%A9%E0%AE%AE%E0%AF%8D

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்



குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

அமைவிடம்	குன்றக்குடி, தமிழ்நாடு, இந்தியா
ஆள்கூற்றுகள்	10.113372583490563°N 78.69868869325357°E
கட்டப்பட்டது	16ஆம் நூற்றாண்டு



தமிழ்நாட்டில் அமைவிடம்

குன்றக்குடி ஆதீனம் அல்லது **குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்** (**Tiruvannamalai Adheenam**, or **Kunnakudi Tiruvannamalai Mutt Adikam** or **Kunnakudi Adheenam**) தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், குன்றக்குடியில் அமைந்த 500 ஆண்டு கால பழையான சைவ சித்தாந்த மடம் ஆகும். இம்மடத்தின் ஆதீனமாக இருந்தவர் புகழ்பெற்ற குன்றக்குடி அடிகள் ஆவார். குன்றக்குடி ஆதீனத்தின் 45 மடாதியாக இருந்த குன்றக்குடி அடிகள் 15 ஏப்ரல் 1995 அன்று முக்தி அடைந்த பின்னர், தற்போது குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் இந்த ஆதீனத்தின் 46வது மடாதியாக உள்ளார்.

வரலாறு

இந்த ஆதீனம் தமிழகத்தில் சைவமும் தமிழும் ஒருங்கே வளர்க்க கட்டமைக்கப்பட்ட பக்தி இலக்கிய கால ஆதீனங்களில் முதன்மையானது ஆகும். இவ்வாதீனம் பொ.ஊ. 11ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் நிறுவப்பட்டது ஆகும். பொ.ஊ. 19ம் நூற்றாண்டில் இராமேசுவரத்திற்கு வந்த திருவண்ணாமலை ஆதீன குருமாகசன்னிதானத்தை இராமநாதபுர சேதுபதி மன்னர் கேட்டுக்கொண்டதின் பெயரில் அப்பொழுதில் இருந்து காரைக்குடி அருகில் உள்ள குன்றக்குடியில் நிறுவப்பட்டு, இன்றுவரை அங்கேயே திகழ்ந்து வருகிறது. வேளாள மரபில் இந்த அதீனம், மயிலம் பொம்மபுர ஆதீனத்தோடு துளுவ வேளாளர் பிரிவினர்க்கு பாத்தியப்பட்டது ஆகும்.

சமூக சீர்த்திருத்தம்

திருவண்ணாமலை ஆதீனத்தின் மறைந்த குருமகாசந்நிதானம் குன்றக்குடி அடிகளார் அவர்கள், சமூக சீர்த்திருத்தர் தந்தை பெரியார் அவர்களோடு இணக்கமான நட்புடன் பழகியவர். மக்களிடம் புரையோடிய சாதி இருக்கங்களையும், மூட நம்பிக்கைகளையும் நீக்க அரும்பாடுபட்டவர்.

அருகில் அமைந்த இடங்கள்

- குன்றக்குடி முருகன் கோயில்
- குன்றக்குடி குடைவரை கோயில்
- பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில்

(😊)(😊) ௐௐௐௐௐௐௐ (😊)(😊)

அடிகளாரைக் குறித்துச் சான்றோர்கள்

- இருபதாம் நூற்றாண்டின் சமய - சமுதாய ஞானியாகப் பாராட்டப் பெறுகிற தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் எதைச் சொன்னாலும் தெளிந்து சொல்வார் - தெளிவாகவும் சொல்வார். எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்பதுபோல், தவத்திரு அடிகளார் அவர்களின் எழுத்தும் சொல்லும், சிந்தனையும் செயலும் மக்கள் சமுதாயத்தின் நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டே அமையும். "நாம் காணும் சமய நெறி, சமுதாயத் தொடர்புடைய நெறி, சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக - சமுதாயத்தின் நல் வாழ்வுக்காக வேண்டுவன செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. அது; மனித சமுதாயத்தின் சிக்கல்கள் தொல்லைகள் அனைத்தையும் மாற்றியமைக்கின்ற பொறுப்பும் கடமையும் சமய நெறிக்கு இருக்கிறது" என்று கூறிச் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் ஒரு பெரும் இணைப்புப் பாலத்தை உருவாக்கும் பணியை அவர் இயன்ற வகையெல்லாம் செய்து வருகின்றார். சமயவாதிகளிடையேயும் சமுதாயவாதிகளிடையேயும் அவர் ஒரு புரட்சிச் சின்னமாகவே திகழ்கின்றார். அவர், சைவநெறி பரப்பும் திருமடத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தாலும் அவரிடத்துச் சமய வெறியையோ, பிறசமயக் காழ்ப்பினையோ காண இயலாது. **- மு. கருணாநிதி**

  சமய உலகில் இருந்து கொண்டு சமுதாய நோக்கு நோக்குவதில் அடிகளார் தனித்திறம் வாய்ந்தவர். தந்தை பெரியார் அவர்களுடன் தனிப்பெரும் நட்புப் பூண்டு இவர் இருந்த நிலையே இதற்கு நல்ல விளக்கம் தரும். மாடதிபதியாக இருந்தாலும், மகேசுவரனைப் பற்றி எண்ணினாலும் இவருடைய சிந்தனைகள் மக்கட் சமுதாயத்தைச் சுற்றியே சுழல்வதனைக் காணலாம்.

இம்முறையில் இவர் ஒரு புதுமைத் துறவியாகப் - புரட்சித் துறவியாகக் காட்சியளிக்கின்றார். மனிதன் விலங்குத் தன்மையிலிருந்து விலகி மனிதத் தன்மையைப் பெற்று இறைநிலையை எய்தவும், இயல்பாய் குறையினின்று நீங்கி, நிறை நலம் பெறச் சமயம் துணை செய்கிறது என்றும், பல்வேறு சமய நெறிகளைக் கடந்த பொதுமை நெறியே மனித உலகத்தை ஈடேற்றுவதற்குத் தகுந்த நெறி, அந்நெறியே தமிழர் சமய நெறி என்றும் கடவுள் தன்மையெனப் பாராட்டப் பெறும் அன்பு, அருள், ஒப்புரவுக் கொள்கை நாட்டில் தழைக்கும்படி கடவுள் நம்பிக்கை உடையோர் வாழ்ந்து காட்ட வேண்டும் என்றும் சின்னங் களும், சடங்குகளும் மட்டுமே கடவுள் நெறிகள் ஆகா என்றும், மழை பொழிந்ததின் விளைவை மண் காட்டுவதைப் போல், சமயநெறி நின்று வாழ்வோரின் இயல்பினை வையகம் காட்ட வேண்டும் என்றும், விளைவுகள் காட்ட வேண்டும் என்றும், தமிழ்ச் சமயத்தில் தீண்டாமை இல்லையென்றும் "ஒன்றே குலம்" என்றும் திருமூலர் ஆணையின்படி ஒரு குலம் அமைக்க வேண்டுமென்றும், மனித உள்ளங்கள் அருள் நெறிவழி இணைக்கப் பெறும் பொழுது மண்ணகம் விண்ணகம் ஆகும் என்றும், தவத்திரு அடிகளார் அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பது உணர்ந்து போற்றத்தக்கதாகும்.
- நெ.து. சுந்தரவடிவேலு, சென்னைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர்.

- ‘என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக் கோளை உள்ளத்தே கொண்டு துறவிக் கோலம் பூண்டு, தமிழ்த் தொண்டு ஆற்றிய சீரியோர் சிற்சிலர், பழங்காலந் தொட்டு செந்தமிழ் நாட்டில் இருந்து வந்திருக்கின்றனர். இந்தக் காலத்தில், அத்தகைய தலைமுறையைச் சார்ந்தவர் என்று மதிப்பிடத்தக்க முறையில், அருந்தமிழ்த் தொண்டு ஆற்றி வருபவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆவார்கள். எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற கொள்கையில் உறுதி பூண்டு, தமிழ் எல்லா வகையிலும் மேம்பாடு எய்தவும், தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் சிறப்பு அடையவும், தமிழ் நாடு எல்லா றிமுறைகளிலும் முன்னோடியாக விளங்கவும்

வேண்டும் என்பதற்காக, அடிகளார் அவர்கள், தமது நேரம், நினைப்பு , உழைப்பு, ஊக்கம், அறிவு, ஆற்றல், முனைப்பு, முயற்சி ஆகிய எல்லாவற்றையும் பயன்படுத்தி வருகிறார்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சிறந்த சிந்தனையாளர்; நல்ல தமிழ்ச் சொற்பொழிவாளர் அழகு தமிழ் எழுத்தாளர்; பொதுத் தொண்டு புரியும் பெற்றியாளர்; பழகுவதற்கேற்ற பண்பாளர். - **இரா. நெடுஞ்செழியன், மேனாள் கல்வி, சுற்றுலா அமைச்சர்.**

- *"தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆழ்ந்த சிந்தனை யாளர். அடிகளார் சமயத் துறையின் தலைமை மாளிகை களில் புதிய சாளரங்களைத் திறந்தவர். வெயிலும், ஒளியும், புயலும், காற்றும் சமுதாயச் சூழலில் மட்டுமன்று; சமயச் சூழலிலும் இயல்பானவையே; ஏற்கத் தக்கவையே என்ற மனம் கொண்டவர். அறிவுலகத்தின் ஆய்விற்கும், வளரும் சமுதாயத்தின் மாற்றங்கட்கும், சமயங்கள் புறம்பானவையல்ல. இவற்றின் தாக்கங்கட்கு ஈடு கொடுத்து, சமய மரபுகள் நிற்க வேண்டுமே யன்றி, இவற்றினின்றும் பாதுகாக்கப்பட வேண்டுவன அல்ல எனும் துணிந்த உள்ளத்தினர். எனவே பகுத்தறிவு மேடையோ பொது உடமை வாதமோ, அவர் புறக்கணிக்கும் ஒன்றாக இருந்ததில்லை. புதிய விஞ்ஞான உலகிலும், புதிய அரசியல் கோட் பாட்டுச் சூழலிலும் புரட்சிகரமான சமுதாயத் தத்துவங் களிடையேயும், நம்பிக்கையோடும் நட்போடும், அடிப்படைச் சமய நடைமுறைகட்கு ஞாயம் கற்பித்து, உயர்ந்து நிற்பவர். புரட்சிகரமான கருத்துக்கள் தமிழர்தம் சமய உலகிற்குப் புறம்பானவையல்ல ; அனைத்து அதிகாரமும் அரசன் கையில் இருந்த காலத்தில் "நாமார்க்கும் குடி அல்லோம், நமனை அஞ்சோம்" என்று பாடிய அப்பரும், மண்ணிற் பிறப்பதே பாவங்களின் விளைவு என்ற மனப்பான்மை பரவி நின்ற சூழலில் 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த வையகத்தே என்று பாடிய திருநாவுக்கரசரும், "கண்மூடிப் பழக்கமெலாம் மண் மூடிப் போக" என்று குரலெழுப்பிய இராமலிங்கரும் புரட்சியாளர் களேயாவர். எனவே அடிகளார் தம் புதுமை* உணர்வுகள், வழி வழி வரும் தமிழ்ச் சமய உலக மரபின் தொடர்ச்சியேயாகும்' – **வா.செ. குழந்தைசாமி, மேனாள் துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்.**

சமூகப்பணிகள்

சமூகசீர்திருத்தம்

குன்றக்குடி அடிகளார் மானுடநேய சீர்திருத்தங்களை சமூகவாழ்க்கையில் உருவாக்க விரும்பினார். சாதிவேறுபாடுகளையும், தனிப்பந்தி முறையையும் அவர் ஏற்கவில்லை. மனிதர்கள் சுமக்கும் பல்லக்கில் ஏறியதில்லை.

1956-ல் குன்றக்குடி அடிகளாரும் ஈ.வெ.ராமசாமிப் பெரியாரும் குன்றக்குடி ஆதீனத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பில் நிகழ்த்திய உரையாடலில் ஈ.வெ.ராமசாமிப் பெரியார் மதத்தின் சாதியடிப்படையிலான ஒடுக்குமுறையைச் சுட்டிக்காட்ட, குன்றக்குடி அடிகளார் அதை ஏற்றுக்கொண்டார். அவர்கள் ஒரு பொதுப்புரிதலுக்கு வந்தனர். குன்றக்குடி அடிகளார் மூடநம்பிக்கை, மனிதாபிமானமற்ற ஆசாரங்கள் ஆகியவற்றுக்கு எதிராகவும் சாதிவேற்றுமைக்கு எதிராகவும் போராடுவதாக ஈ.வெ.ராமசாமி பெரியாரிடம் ஒப்புக்கொண்டார்.

குன்றக்குடி மாதிரி கிராமம்

1973-ல் குன்றக்குடி கிராமத்தை தன்னிறைவுக் கிராமமாக ஆக்கும் திட்டத்தை தொடங்கினார். குன்றக்குடி ஆதீனத்தின் கீழிருந்த கிராமங்களில் தீப்பற்றாத வீடுகளை அமைத்தல், குடிசைத்தொழில்களை உருவாக்கி வேலைவாய்ப்பில் தன்னிறைவுபெறச் செய்தல், குடிநீர் வசதி உருவாக்குதல், கிராமநிர்வாக முறையை செம்மையாக்குதல் ஆகியவற்றில் குன்றக்குடி அடிகளார் முன்மாதிரியான பணிகளைச் செய்திருக்கிறார். அதற்காக கூட்டுறவு சங்கங்களை உருவாக்கினார். 1958-ல் குன்றக்குடியில் உயர்நிலைப் பள்ளியை தொடங்கினார்.

குன்றக்குடியை முன்மாதிரி கிராமமாக ஆக்க STAR (Science Technology Agriculture Religion) என்னும் கொள்கை வரைவு ஒன்றை உருவாக்கினார். இந்திய அரசின் திட்டக்குழுவினரால் இந்த திட்டத்தின் வெற்றி ஆராயப்பட்டு முன்மாதிரியாகக் கொள்ளப்பட்டது.

ஜூலை 7, 8, 1985-ல் நடைபெற்ற குன்றக்குடி அடிகளாரின் மணிவிழாவில் தேசியக்கொடி, அருள்நெறித் திருக்கூட்டக் கொடி, கூட்டுறவுக் கொடி ஆகியவை ஏற்றப்பட்டன. அதை தன் கொள்கை என குன்றக்குடி அடிகளார் அறிவித்தார்.

பொறுப்புகள்

வகித்த பதவிகள்

- தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு இயக்கத் தலைவர்
- தமிழ்நாடு திருவருட்பேரவை தலைவர்
- கிராமத் திட்டக்குழு நெறியாளர்
- தமிழக மேலவை உறுப்பினர்

உறுப்பினராக இருந்த குழுக்கள்

- இந்திய அரசு சமூகநலக்குழு
- தமிழக அரசு திட்டக்குழு
- தமிழக அரசு சமூக பண்பாட்டு கல்வி மறுமலர்க்கிச்க்குழு
- தமிழநாடு இந்து சமய அறநிலைய துறை உயர்மட்ட ஆலோசனைக்குழு
- தமிழ் பல்கலைக்கழ ஆட்சிக்குழு
- இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பக்குழு
- தமிழ்நாடு அரசு மதுவிலக்கு பிரச்சாரக்குழு
- தமிழக அரசு எழுத்துச் சீர்திருத்தக்குழு
- தஞ்சை தமிழ்பல்கலைக்கழகப் பாடத்திட்ட ஆலோசனைக்குழு

ஆன்மீகப் பணிகள்

அருள்நெறித் திருக்கூட்டம்

ஆகஸ்ட் 2, 1952-ல் ஈ.வெ.ராமசாமிப் பெரியார் பிள்ளையார் சிலையை உடைக்கும் போராட்டத்தை அறிவித்தபோது அதற்கு எதிர்வினையாக குன்றக்குடி அடிகளார் 11 ஆகஸ்ட் 1952-ல் சமயத்தலைவர்களையும் அறிஞர்களையும் குன்றக்குடியில் கூட்டி அருள்நெறித் திருக்கூட்டம்

என்னும் அமைப்பை தொடங்கினார். மாநிலச் செயலாளர்களாக சா. கணேசன் , ஈரோடு எஸ். மீனாட்சிசுந்தரம் ஆகியோர் பொறுப்பேற்றனர். இந்த அமைப்பு மாநிலம் முழுக்க கிளைகளுடன் நிறுவப்பட்டது. ஈ.வெ.ராமசாமிப் பெரியாரின் பிள்ளையார் சிலையுடைப்புக்கு எதிராக மிகக்கடுமையான பிரச்சாரத்தை இந்தாஅமைப்பு முன்னெடுத்தது. சில இடங்களில் பூசல்களும் நிகழ்ந்தன. மம்சாபுரத்தில் குன்றக்குடி அடிகளார் பேசிய கூட்டத்தில் கற்கள் வீசப்பட்டன. கரூரில் அவருக்கு எதிராக திராவிடர் கழகத்தவர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அருள்நெறித் திருக்கூட்டம் முதல் மாநாடு தேவகோட்டையில் ஜூலை 10, 1954-ல் நடைபெற்றது. அதில் சி.ராஜகோபாலாச்சாரியார் கொடியேற்றினார். சி.சுப்ரமணியம், அ.ச.ஞானசம்பந்தன் போன்றவர்கள் பேசினர். அருள்நெறித் திருப்பணி மன்றம் என்னும் அமைப்பு இந்த அமைப்பின் கிளையாக ஜூன் 10, 1955-ல் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு தெய்வீகப்பேரவை

தமிழக ஆலயங்களை பாதுகாக்கவும், சமயம் பரப்பவும் வெவ்வேறு மதத்தலைவர்கள் மற்றும் ஆதீனங்களை பங்கெடுக்கச்செய்து தமிழ்நாடு தெய்வீகப்பேரவை என்னும் அமைப்பை 1966-ல் குன்றக்குடி அடிகளார் உருவாக்கினார்.

வாழ்க்கை வரலாறுகள்

- அருள்நெறித்தந்தை அடிகளார் - பா.சுந்தர்
- குன்றக்குடி அடிகளாரின் திருக்குறட் பணி - இரா. இளங்குமரனார்
- குன்றக்குடி அடிகளார் பணிகள் - பா.சுந்தர்
- அற்புதத்துறவி அடிகளார் - சேதுபதி
- தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் - சி.நடராசன்
- அடிகளார் ஓர் உறவுப்பாலம் - நோயல் மி. டாக்டர் பரமகுரு
- அறிவியல் அடிகளார் - நோயல்.மி
- தவத்திரு குன்றக்குடி அடிகளார்- தமிழகத்தின் ஆன்மிக வழிகாட்டி; - பொன்னீலன்
- தவத்திரு குன்றக்குடி அடிகளார் முதலாம் ஆண்டு குருபூசை மலர்
- குன்றக்குடி அடிகளார் - கிருங்கை சேதுபதி, சாகித்ய அக்காதமி வெளியீடு
- தவத்திரு குன்றக்குடி அடிகளார் - வன்மீக வெங்கடாசலம்

வரலாற்று இடம்

தமிழ் ஆன்மிக வரலாற்றில் தொன்மையான மடம் ஒன்றில் இருந்து அதன் மரபுகளையும் ஆசாரங்களையும் மீறி பொதுத்தொண்டுக்கு வந்த முதல் துறவி என குன்றக்குடி அடிகளார் கருதப்படுகிறார். கடவுள் மறுப்புக்கொள்கை, மார்க்ஸியம் ஆகியவற்றுடன் திறந்த உரையாடலுக்கு முன்வந்தவர். அவர்களிடமிருந்து சமூகசீர்திருத்த நோக்குகளையும் மனிதாபிமான நோக்கையும் எடுத்துக்கொண்டவர். சமூகசீர்திருத்தம், மதச்சீர்திருத்தம், மத ஒற்றுமை ஆகியவற்றிற்காக களப்பணிகளில் ஈடுபட்டார். குன்றக்குடி அடிகளாரின் கிராமத்தன்னிறைவு திட்டம் இந்திய அளவில் கவனிக்கப்பட்ட ஒரு முன்மாதிரி முயற்சி.

தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவராக குன்றக்குடி அடிகளார் கருதப்படுகிறார். ஆன்மிக உரைகளுடன் மரபிலக்கிய பேருரைகளையும் ஆற்றினார். திருக்குறளை சமூகப்பொதுநூலாக முன்னிறுத்துவதில் பெரும் பங்காற்றினார்.

குன்றக்குடி அடிகளார்

அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

10.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-5
11.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-6
12.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-7
13.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-8
14.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-9
15.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-10
16.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-11
17.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-12
18.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-13
19.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-14
20.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-15
21.	குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை-16
22.	சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள்
23.	சிந்தனை துளிகள்
24.	சிலம்புநெறி
25.	திருக்குறள் உரை
26.	திருவருட் சிந்தனை
27.	திருவாசகத்தேன்
28.	வாழ்க்கை நலம்

பெரியாரும் குன்றக்குடி அடிகளாரும்

2 துருவங்களின் ஒன்றிணைந்த மனிதநேய பயணம்!

https://www.heronewsonline.com/periyar-and-kundrakudi-adigalar/

1950களில் பல கருத்துகளில் மாறுபட்டிருந்தாலும் ஜாதி ஒழிப்பில் ஒன்றிணைந்தனர் பெரியாரும், குன்றக்குடி அடிகளாரும்.

பகுத்தறிவுவாதியும் தீவிரக் கடவுள் மறுப்பாளருமான தந்தை பெரியார் மற்றும் பழுத்த ஆன்மீகவாதியான குன்றக்குடி அடிகளார்

இருவருக்குமிடையே ஆத்மார்த்தமான நட்புணர்வு இருந்தது என்றால் நம்புவதற்கு சிரமமாகத்தான் இருக்கும். ஆனால் ஜாதி ஒழிப்புக் களத்தில் இருவரும் இணைந்தே பணிபுரிந்தனர்.

குன்றக்குடி அடிகளார் 1945ஆம் ஆண்டு தர்மபுரம் சைவ மடத்தில் துறவியாக சேர்ந்து துறவறத்தை மேற்கொண்டார். சைவ சித்தாந்தங்கள் தொடர்பான நீண்ட பயிற்சியுடன் தமிழ், சமஸ்கிருதம் போன்றவற்றையும் கற்றார். அப்போது குன்றக்குடி திருவண்ணாமலை சைவ மடம் தகுந்த ஒரு இளம் துறவியை தேடிக்கொண்டு இருந்தது, அந்த சமயத்தில் மிகச்சிறிய வயதில் குன்றக்குடி அடிகளார் சைவமடத்தின் ஆதீனப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

தான் சைவமடத்தின் தலைமைப் பொறுப்பேற்றதும் தன்னுடைய சிந்தையில் உள்ள சீர்திருத்தங்களை செயலில் காட்டினார். வேறு எந்த மடாதிபதியும் செய்யத் துணியாத பல சீர்திருத்தங்களை அடிகளார் முதல் முறையாக நடைமுறைப்படுத்தினார் முக்கியமாக, ஆதி திராவிடர்களை கோவிலில் வழிபாட்டிற்கு அனுமதித்தல், சமஸ்கிருத வேதமந்திரங்களுக்குப் பதிலாக தமிழில் வழிபாடு, பூசைகள் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். கோவில்களில் அர்ச்சகர்கள் பின்பற்றி வந்த ஜாதியக் கட்டுப்பாடுகளை தகர்த்து ஒழித்த வீரராகத் திகழ்ந்து வந்தார். 1925 முதல் 1995ஆம் ஆண்டு வரை குன்றக்குடி மடத்தின் ஆதீனமாக அடிகளார் விளங்கினார்.



தன்னுடைய ஆரம்ப காலத்தில் சுதந்திரப் போராட்டத்தில் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார். அவர் பூமிதான இயக்கத்தில் பங்குகொண்டு நிலமில்லாத ஏழைகளுக்கு நிலங்களை வழங்கினார். மக்களின் மத்தியில் இவர் குன்றக்குடி அடிகளார் என்ற சிறப்புப்

பெயருடன் அழைக்கப்பட்டார். பழுத்த சைவத்துறவியான அடிகளாரும், பார்ப்பனர் அல்லாத அமைப்பின் தலைவரும் தீவிர கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டவருமான தந்தை பெரியாரும் ஆரம்ப காலத்தில் எதிரெதிர் கருத்து கொண்டவர்களாக இருந்தனர்.

தந்தை பெரியார் 1950ஆம் ஆண்டின் மத்தியில் பிள்ளையார் சிலை உடைப்பு மற்றும் ராமர் படம் எரிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தார். இந்தப் போராட்டத்திற்கு குன்றக்குடி அடிகளார், அருள்நெறித் திருக்கூட்டம் என்ற அமைப்பை ஏற்படுத்தி கடுமையான எதிர்ப்பு தெரிவித்திருந்தார். பெரியாரின் இந்தப் போராட்டங்களை எதிர்த்துத் துண்டறிக்கைகளை வெளியிட்டார்.

மேலும், பல்வேறு மடங்களை ஒன்றிணைத்து பெரும் போராட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டார். தொடக்கத்தில் காஞ்சி மடம் இவரது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தாலும் இறுதியில் தனது ஆதரவை விலக்கிக் கொண்டது.

1955ஆம் ஆண்டு பெரியார் மலேசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார், அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சில நாட்களுக்குப் பிறகு குன்றக்குடி அடிகளாரும் மலேயா நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பெரியாரின் நாத்திகக் கருத்துக்களை எதிர்க்கும் விதமாக குன்றக்குடி அடிகளார் மலேசிய நாட்டிற்குச் செல்ல திட்டமிட்டார்.

பொதுவாக மதத் துறவிகள் கடல் கடப்பது மத நிந்தனை செய்வதாக கருதப்பட்ட காலம் அது. ஆனால் அடிகளார் இது குறித்துக் கூறும்போது, மலேசியாவில் தமிழர்களிடையே பெரியார் தூவிய நாத்திகக் கருத்துக்கு எதிர் கருத்துக் கூறவே தான் கடல் கடக்க வேண்டியதாயிற்று என்று கூறினார். மத ரீதியினாலான விதிமுறைகளை மீறுவது நாத்திகம் என்ற கருத்தின்படி ஒருவிதத்தில் குன்றக்குடி அடிகளாரும் பெரியாரும் கருத்து ரீதியில் ஒரு புள்ளியில் இணைந்தனர்.

மலேசியப் பயணத்தில் குன்றக்குடி அடிகளார், நாத்திகக் கருத்துக்களைப் பரப்பும் பெரியாரின் பிரச்சாரம் குறித்து கடுமையான விமர்சனம் தெரிவித்திருந்தார். மேலும், சைவத்தில் ஜாதி பிரிவினைக்கு இடமில்லை என்று கூறியிருந்தார்.

இது குறித்து தமிழகம் திரும்பிய பெரியார் கருத்து தெரிவித்தபோது, "ஒரு சைவச் சாமியார் மலேசியா நாட்டிற்கு என்னைப் பின்தொடர்ந்து வருகை புரிந்தார். நான் அவர் குறித்து நண்பர்களிடம் சொன்னபோது, அவரும் நம்முள் ஒருவர்தான் என்று தோழர்களிடம் கூறினேன். அவர் பின்பற்றிய கொள்கையை குறித்து பிரச்சாரம் செய்ய வந்துள்ளார், நான் என்னுடைய கடமையை செய்துவிட்டு வந்தேன், நமது தோழர்கள் அவருக்கு எதிராக எந்த கருத்தையும் கூற வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டார்.

இதிலிருந்தே பெரியார் மற்றும் குன்றக்குடி அடிகளாருக்கு இடையே கருத்துப்போர் துவங்கியது. இந்த நிலையில் பெரியாரின் ஊரான ஈரோட்டில் பெரியார், அடிகளார் இருவருக்கும் பொதுவானவர்கள் இருவரையும் சந்திக்க வைக்க முயன்றனர். ஈரோட்டில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

பெரியார், அடிகளாரைச் சந்திக்க வரும்போது, அடிகளார் ஈரோடு இல்லத்தின் முதல் மாடியில் அமர்ந்திருந்தார். பெரியார் வீட்டிற்குள் நுழையும்போது அடிகளாரின் உதவியாளர், அடிகளார் முதல் மாடியில் தங்கியிருப்பதாக கூறினார். பெரியார் வந்த தகவல் அடிகளாரிடம் தெரிவிக்கப்பட்டதும், அவர் கீழே இறங்கி வருவதற்கு முன்பாகவே, அவர் இறங்கிவருவது முறையல்ல என்று கூறி, தம்மை விட வயதில் அயம்பது வயது குறைவாக இருந்த போதிலும் பெரியார் தாமாகவே முதல் மாடிக்கு அடிகளாரைச் சந்திக்கச் சென்றார்.

அடிகளார் பெரியாரை வாசல் வரை வந்து வரவேற்றார். அடிகளார் பற்றி பெரியார் கூறும்போது எப்போதும் 'மகாசன்னிதானம்' என்றே மதிப்புடன் குறிப்பிட்டு வந்தார். அதனாலேயே இருவரிடமும் நட்புறவு நீண்டகாலமாக தொடர்ந்தது.

பெரியார் தன்னுடைய தடியை ஊன்றிக்கொண்டு அடிகளார் இருந்த அறைக்குச் சென்றார். அடிகளார் தன்னுடைய பெரிய இருக்கையில் தனக்கு அருகே பெரியாரையும் அமரப் பணித்தார், ஆனால் பெரியார் அதை மறுத்துவிட்டு "உங்களது சம்பிரதாயங்கள் எப்படியோ அப்படியே நடக்கட்டும்" என்று கூறி விருந்தினர்களுக்கான இருக்கையில் அமர்ந்தார். பெரியாரைவிட மிகச் சிறிய வயதுடைய அடிகளார் பெரியாரின் இந்தப் பணிவைக் கண்டதும் மனமுருகி விட்டார்.

அதன்பிறகு பெரியாருக்கும் அடிகளாருக்குமிடையே உரையாடல்கள் துவங்கின பெரியார் கடவுள், மூடநம்பிக்கை, ஜாதிப்பிரிவினை, தீண்டாமை குறித்து தொடர்ந்து பேசினார். பெரியாரின் பேச்சைக் கேட்டுக்கொண்டே இருந்த குன்றக்குடி அடிகளார், பேச வார்த்தைகள் இன்றி அமைதியாக இருந்தார். இது வரை ஆன்மீக பெரியோர்களின் சொற்பொழிவைக் கேட்டு அப்பர், சுந்தரர், ராமானுஜர், ராமலிங்க அடிகள் போன்றவர்களின் நூல்களைப் படித்த அடிகளார், பகுத்தறிவு பகலவனிடமிருந்து அருவி போல் தொடர்ந்து பொழிந்துகொண்டிருந்த கருத்துகளை எதிர் வாதம் செய்யாமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டு உள்வாங்கிக் கொண்டிருந்தார்.

பேச்சின் முடிவில் பெரியார் நகைச்சுவையாக, “எனக்கும் கடவுளுக்கும் எந்த ஒரு சச்சரவும் இல்லை. என்று நான் கடவுளைக் கண்களால் காண்பேனோ அன்று நான் நம்பிக் கொள்கிறேன்” என்று கூறினார். “அதுவரை மனிதகுலத்திற்கு தொண்டாற்றுவேன்” என்று பெரியார் கூறினார்.

இதைக் கேட்ட அடிகளார், “நான் ஆன்மீக வழியில் மனித குலத்திற்கு நன்மையைச் செய்கிறேன். நீங்கள் நாத்திக வழியில் இருந்துகொண்டு தொண்டாற்றுகிறீர்கள்” என்று கூறிவிட்டு, “நாம் இருவருமே ஒரு செயலைத்தான் செய்கிறோம், நமது இருவர் செயலிலும் மனிதகுல நன்மையே மிளிர்கிறது” என்று கூறினார்.

உரையாடலின் இறுதியில் இருவருக்குமிருந்த இறுக்கம் விலகி நல்ல நட்பு மலர்ந்திருந்தது.

1956ஆம் ஆண்டு திருச்சியில் பெரியாரின் பிறந்த நாள் விழாக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. இதற்கு அடிகளாரும் அழைக்கப்பட்டிருந்தார். அடிகளார் எந்த ஒரு மறுப்பும் தெரிவிக்காமல் உடனடியாக பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ள வருவதாக கூறினார்.. பொதுமேடையில் இருவரும் கலந்துகொண்ட முதல் கூட்டமும் இதுவே ஆகும். பொது மேடையில் கடுமையான கடவுள் மறுப்புக்கொள்கையுடைய பெரியாரும், பழுத்த ஆன்மீகவாதியான குன்றக்குடி அடிகளாரும் இணைந்து உரையாடினர்.

இருவரையும் காண பிறந்த நாள் விழா மக்கள் வெள்ளத்தில் நிறைந்திருந்தது. கூட்டம் முடிந்ததும் புகைப்படக் கலைஞர் ஒருவர், “நீங்கள் இருவரும் எங்கள் ஸ்டூடியோ வந்தால் நல்ல முறையில்

இருவரையும் புகைப்படம் எடுக்க ஏதுவாக இருக்கும்" என்று கூறினார். ஆனால் பெரியார், குன்றக்குடி அடிகளாரை அவ்வாறு அழைப்பது தவறு என்று கூறி, புகைப்படக் கலைஞரைக் கண்டித்தார்.

மேடையில் பேசிய ஒரு திராவிடர் கழக பேச்சாளர் கடவுள் மறுப்புப் பற்றி மிகவும் தீவிரமாக பேச ஆரம்பித்தார். அப்போது பெரியார், தன்னுடைய கைத்தடியால் பேச்சாளரைத் தட்டி, "நமது விருந்தினரை வைத்துக்கொண்டு அவரைச் சங்கடப்படுத்தும் செயலில் ஈடுபடக் கூடாது" என்று கூறினார். அதே மேடையில் பெரியாருக்கு அடிகளார் பயனாடை அணிவித்து மகிழ்ந்தார்.

இந்த நிகழ்ச்சி பெரியாரின் தொண்டர்களுக்கும், ஆன்மீகவாதிகளுக்கும் இன்ப அதிர்ச்சியாக அமைந்தது. அந்த மேடையில் பேசிய அடிகளார், பெரியார் ஜாதி ஒழிப்புப் போராட்டம் குறித்தும், சமூகநீதி களத்தில் பெரியாரின் தொண்டு குறித்தும் வரிசையாக பட்டியலிட்டு உரையாற்றினார்.

"நாம் ஆன்மீகவாதிகளாக இருக்கிறோம். ஆனால் நாம் பேசும் தமிழை சூத்திர மொழி என்று பார்ப்பனர்கள் கூறுகிறார்கள். ஆனால் கடவுள் மறுப்பாளராக இருக்கும் பெரியார், கோவில்களில் தமிழ் மந்திரம் வேண்டும் என்று கூறி போராடுகிறார்" என்று பெரியாரின் தொண்டுகள் பற்றி உரை யாற்றினார்.

அதன்பிறகு நெல்லையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றிற்கு பெரியாரும் அடிகளாரும் இணைந்தே பயணித்தனர். அப்போது ஜாதி ஒழிப்பு, தமிழ் மொழிப்பற்று குறித்து இருவரும் உரையாடினர்.

இரண்டு துருவங்கள் மனிதநேயத் தொண்டில் ஒன்றிணைந்து பயணித்தன. பெரியார் 1973ஆம் ஆண்டு மறையும் வரை இருவருக்கிடையேயான நட்பு ஆன்மீகவாதிகள் மற்றும் பகுத்தறிவாளர்களே வியக்கும் வண்ணம் தொடர்ந்தது.

பேராசிரியர் ஏ.ஆர்.வெங்கடாசலபதி

('தி இந்து' ஆங்கில நாளிதழில் 16.9.2016 எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்)

(😊)(😊) @@@@@@ (😊)(😊)

குன்றக்குடி முருகன் கோயில்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AF%81%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9F%E0%AE%BF_%E0%AE%AE%E0%AF%81%E0%AE%B0%E0%AF%81%E0%AE%95%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%95%E0%AF%8B%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D

குன்றக்குடி குன்றவர் முருகன் கோயில்



மலையின் உச்சியில் அமைந்துள்ள குன்றவர் முருகன் கோயில்



குன்றக்குடி குன்றவர் முருகன் கோயில்

தமிழ்நாடு வரைபடத்தில் குன்றக்குடி

ஆள்கூறுகள்: 10°06′54″N 78°41′57″E

பெயர்

வேறு பெயர்(கள்):	குன்னக்குடி சண்முகநாதர் சுவாமி
அமைவிடம்	
நாடு:	இந்தியா
மாநிலம்:	தமிழ்நாடு
மாவட்டம்:	சிவகங்கை
அமைவு:	குன்றக்குடி
கோயில் தகவல்கள்	
கட்டிடக்கலையும் பண்பாடும்	
கட்டடக்கலை வடிவமைப்பு:	திராவிடக் கட்டிடக்கலை

குன்றக்குடி குன்றவர் முருகன் கோயில், சிவகங்கை மாவட்டம், குன்றக்குடி எனும் ஊரின் குன்றின் உச்சியில் சண்முகநாதர், வள்ளி – தெய்வானையுடன், ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களுடன் காட்சி தருகிறார். இக்கோயிலில் குடிகொண்ட முருகனை குறித்து அருணகிரிநாதர் தம் திருப்புகழில் பாடியுள்ளார்.[1][2][3][4]

அமைவிடம்

மதுரையிலிருந்து எண்பது கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. குன்றக்குடியிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் பிள்ளையார்பட்டி கோயில் உள்ளது. காரைக்குடியில் இருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இங்கிருந்து மதுரை செல்லும் பேருந்தில் சென்று குன்றக்குடி கோவிலுக்கு செல்லலாம்.

குன்றக்குடி குடைவரை கோயில்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AF%81%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9F%E0%AE%BF_%E0%AE%95%E0%AF%81%E0%AE%9F%E0%AF%88%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%88_%E0%AE%95%E0%AF%8B%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D

குன்றக்குடி குடைவரை கோயில்கள் என்பவை சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள குன்றக்குடியில் அமைந்துள்ள மூன்று குடைவரை கோயில் ஆகும். பொ.ஊ. 7 ஆம் நூற்றாண்டில் தொடக்ககாலப் பாண்டியர்களால் அமைக்கப்பட்டவை ஆகும். பாறையில் வெட்டப்பட்டவையாக மூன்று குகைகள் காணப்படுகின்றன. பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமான இக்கோயில்கள் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் கீழ் உள்ளன.

அமைப்பு

இம்மூன்று குடைவரைகளும் இவை குடையப்பட்டுள்ள குன்றின் தெற்குப் பகுதிச் சரிவில் உள்ளன. இவை ஒன்றுக்குப் பக்கத்தில் மற்றதாக அடுத்தடுத்து வரிசையாகக் குடையப்பட்டுள்ளன. அடுத்தடுத்த குடைவரைகளுக்கு இடையில் உள்ள பகுதியில் கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு கோட்டத்தில் சிவலிங்கமும், மற்றதில் வலம்புரி விநாயகர் சிற்பமும் உள்ளன. இம்மூன்று குடைவரைகளுக்கும் முன்னால், அவற்றை முழுவதுமாக மறைக்கக்கூடிய வகையில் மண்டபம் ஒன்று உள்ளது. இது பிற்காலத்தைச் சேர்ந்தது.

சிற்பங்கள்

இக்குடைவரை கோயிலில் புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. இவை அக்காலத்துச் சிற்ப மரபையொட்டிய புடைப்புச் சிற்பங்களாகும். ஒரு முறை, சிவனைத் திருமால் ஆயிரத்து எட்டுத் தாமரை மலர்களால் அர்ச்சிக்கும் போது திருமாலைச் சோதிக்க எண்ணிய சிவபெருமான், ஒருமலரை எடுத்து ஒளித்து வைத்தாராம். அப்போது திருமால் காணாமற் போன ஒரு தாமரை மலருக்கு ஈடாகத் தனது கண்களுள் ஒன்றைப் பிடுங்கி மலராக அர்ச்சித்தாராம். இச்செயலால் மகிழ்ந்த சிவபெருமான் திருமாலுக்குச் சக்கர ஆயுதத்தை அளித்ததாகக் கூறப்படும் புராணக்கதை இக்கோயிலில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில், சிவபெருமான் நடனமாடுவதைத் திருமால் கருடன்மீது சாய்ந்தபடி பார்ப்பதையும், பிடுங்கி எடுத்த ஒரு கண் திருமாலின் கையில் இருப்பதையும் காண முடிகிறது.

கல்வெட்டுக்கள்

இங்குள்ள குடைவரைகளின் சுவர்களிலும், தூண்களிலும், முன் மண்டபத்திலுமாக மொத்தம் 45 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றுட் பெரும்பாலானவை பாண்டிய மன்னர் காலத்தவை. இவற்றுள் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுக்கள் மட்டும் 12 உள்ளன. இவற்றுடன், சடையவர்மன் சிறீவல்லபதேவன், விக்கிரம பாண்டியன், மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆகிய பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக்களும் இங்கு உள்ளன. சோழ மன்னர்களில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் ஆகியோர் காலக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. சில கல்வெட்டுக்களில் மன்னர் பெயர்கள் காணப்படவில்லை.














இந்து–விரோத போக்கு

https://antihidnu.wordpress.com/

பிராமணர் தேர்தலில் நிற்பது சாத்தியமா - பிராமண எதிர்ப்பு - காழ்ப்பு - துவேஷம் - திராவிடத்துவ சித்தாந்தம், திராவிட ஆட்சி மற்றும் தமிழக இந்துத்துவ அரசியல்

மார்ச் **31, 2026**



<u>பிராமணர் எல்லா துறைகளிலும் ஆதிக்கம் செல்லுத்தினரா?</u>: வியாபாரம், வணிகம், வர்த்தகம், பொருள் உற்பத்தி, ஏற்றுமதி-இறக்குமதி என்றெல்லாம் திகழும் வேலைகளில் பெரும்பாலும் பிராமணரல்லாதவர் தான் இருந்தனர், இருக்கின்றனர். கோடிகளில் சம்பாதித்து பெரிய பணக்காரர்களாக, தனவந்தர்களாக, ஜமீன்தாரர்களாக, இருந்தனர்.

- துபாஷி வேலை சிறந்தது என்றால் பிராமணரல்லாதவர் (முகலாயர் காலத்திலிருந்து, காலனிய காலம் வரை), அவ்வேலைக்குச் சென்றனர்.
- தொழிற்துறை தெரிந்தால் தான் வேலை என்றால் அத்தகைய தொழிலை அறிய வேண்டியுள்ளது.

- மூட்டைத் தூக்கினால் தான் வாழ்வு என்றால் (அதாவது அத்தகைய கடின உழைப்புக் கொண்ட பணி), மூட்டைத் தூக்க வேண்டியுள்ளது.
- படித்தால் தான் வேலை என்றால் படிக்க வேண்டிய நிலை உண்டாகிறது.
- இபொழுது ஐடியில் இருப்பவர்களும் அப்படித் தான்.

உதாரணத்திற்கு இவை கொடுக்கப் படுகின்றன. இப்பட்டியல் மற்ற துறைகள், வேலைகள் என்று பார்ட்தால், இன்னுன் நீளும். இவற்றில் எல்லா ஜாதியினரும் இருந்தனர், இப்பொழுதும் உள்ளனர். பிராமணர்கள் மட்டும் ஆதிக்கம் செல்லுத்தவில்லை. மற்ற ஜாதியினர் ஆதிக்கம் செல்லுத்தினர் என்பதனால், அவர்கள் தாக்கப்படவில்லை.



<u>பிராமணர் எவ்வாறு ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர்?</u>:

பிராமணர்கள் தங்களின் ஆதிக்கத்தை முக்கியமாக கல்வி, சடங்குகள், மற்றும் சமூகக் படிநிலை (வர்க்க முறை) மூலம் நிலைநிறுத்திக் கொண்டனர் என்று வாதம் வைக்கப்படுகின்றது. ஆரியப் பண்பாடு[1], வேதக் கல்வி, கோவில் நிர்வாகம் மற்றும் அரசர்களுக்கு ஆலோசனைகள்

வழங்குதல் போன்றவற்றில் தங்களை முன்னிலைப்படுத்தியதன் மூலம், காலப்போக்கில் சமூகத்தின் உயர்பீடத்தை அவர்கள் அடைந்தனர் என அவ்வாதம் விளக்குகிறது. இவையெல்லாமே பழங்காலத்தைய காலம்-மட்டுமல்லாது வாதத்திலும் இக்காலத்தை ஒட்டியதல்ல என்று தெரிந்து கொள்ளலாம். பிராமண ஆதிக்கம் உருவானதற்கான முக்கிய காரணங்கள் என்பனவற்றை, இனி ஆராயலாம்:




- ***<u>கல்வி மற்றும் அறிவு ஆதிக்கம்</u>***: பண்டைய இந்தியாவில் கல்வி, வேதங்கள், சாஸ்திரங்கள் ஆகியவற்றைக் கற்று, அதைக் கட்டுப்படுத்தும் ஏகபோக உரிமையை பிராமணர்கள் கொண்டிருந்தனர்.
    - இவ்வாறு கொடுக்கப் படும் காரணங்கள் கடந்த 2500 ஆண்டுகளில் அவ்வாறில்லை என்பது தான் சரித்திர ரீதியில் தெரிகிறது.
    - ஜைன-பௌத்த மதங்கள் தான் ஆதிக்கத்தில் இருந்தன. பிறகு இடைக்காலத்தில் முகமதியர் அதற்கும் பிறகு ஐரோப்பியர்-ஆங்கிலேயர் என்று ஆட்சி-அதிகாரங்களில் இருந்தனர்.
    - இவர்கள் காலங்களில் வேத-வர்ணாஷ்ரம-வைதீக சடங்குமுறை முதலியவற்றை எதிர்த்து, மறுத்து, அடக்கித் தான் தமது மதங்களை உருவாக்கி ஆதிக்கத்திற்கு கொண்டு வந்தனர்.

- எனவே, கடந்த 2500 ஆண்டுகளில் பிராமணர் எப்படி எங்கு, எவ்வாறு ஏகபோக உரிமையுடன் கல்வி மற்றும் அறிவு ஆதிக்கம் கொண்டிருந்தனர் என்று தெரியவில்லை.



- ***சடங்கு வழி மேலாண்மை***: கோவில் சடங்குகள், ஹோமங்கள், மற்றும் பிற மத சடங்குகளை நடத்துபவர்களாக இருந்ததால், சமூகத்தில் அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து கிடைத்தது.
  - ஆனால் கடந்த 2500 ஆண்டுகளில் என்னவாயிற்று என்று வாதங்களில் குறிப்பிடுவது கிடையாது.
  - ஏனெனில், கடந்த காலங்களில் அவை 90% மேற்குறிப்பிட்ட மாற்றுமதத்தினரால் ஒழித்துக் கட்டப் பட்டு விட்டன.
  - சுதந்திரம் கிடைத்தப் பிறகு, அந்த 10% -மும் முறையாக நடக்கின்றனவா என்று தெரியவில்லை. அதாவது, அத்தொழில் செய்த பிராமணர் வெவ்வேறு வேலைகளுக்குச் சென்று விட்டனர்.
  - புரோகிதர்கள் பெரும்பாலோர் ஏழ்மைக்குத் தள்ளப் பட்டனர். சமையல்காரர்களாகவும் மாறினர்.
  - பல மாநிலங்களில் கக்கூஸ் கழுவும் வேலையிலிருந்து மற்ற வேலைகளையும் செய்து வருகிறார்கள்.



புதுக்கிராமம் சம்பவம்

1943-ஆம் ஆண்டில் அண்ணாதுரை அவர்கள் "ஆரிய மாயை" என்ற நூலை எழுதினார். தனிப்பட்ட பிராமணர்கள் என்பதாக இல்லாமல், பிராமணர் சமுதாயம் முழுவதையும் மிகவும் கடுமையாக அந்த நூலில் அண்ணாதுரை ஏசியிருந்தார்.

அந்த நூல் பல பதிப்புகள் வெளியிடப்பட்டன. பிரதம ஆசிரியர் வசம் இருப்பது, 1969-ஆம் ஆண்டில் வெளியான பத்தாவது பதிப்பு.[3]

1953-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16-ஆம் நாளன்று தூத்துக்குடி புதுக்கிராமத்தில் சுமார் நூறு பேர் அடங்கிய ஒரு கும்பல் நுழைந்து பயங்கர ஆயுதங்களுடன் பிராமணர்களது வீடுகளைத் தாக்கியது.

கற்கள் வீசப்பட்டன; மேஜை, நாற்காலி போன்ற வீட்டு மரச்சாமான்களும் நாசம் செய்யப்பட்டன; பெண்களும், குழந்தைகளும் கொலை செய்யப்படுவார்கள் என்று மிரட்டப்பட்டது; நகைகள் கொள்ளையடிக்கப் பட்டன; அரிசி முதலிய உணவுப் பொருட்கள் சூறையாடப் பட்டன. வழக்கறிஞர் பத்மநாப ஐயரின் வீடு கடுமையாகத் தாக்கப்பட்டது. பைல்கள், தஸ்தாவேஜுகள் அழிக்கப் பட்டன; ஆயுத ரிசர்வ் போலீஸார் அங்கு வருவதற் குள்ளாக அந்தக் கும்பல் தப்பி ஓடிவிட்டது.[4]

'They beat him up and threw away his sacred thread': Six held for attacks on Brahmins in Chennai

Tamil Nadu

'They beat him up and threw away his sacred thread': Six held for attacks on Brahmins in Chennai

Separate attacks on Brahmins continued on Tuesday allegedly conducted by members of the Dravida Viduthalai Kazhagam.

- **<u>வர்க்க முறை (வர்ணாசிரமம்)</u>:** நால்வர்ண முறையில் தங்களை முதன்மை நிலையில் (சமூகக் படிநிலை) வைத்து, மற்றவர்களை அதற்குக் கீழ்நிலையில் வகைப்படுத்தினர்.
    - இத்தகைய குழப்பவாதம் மூலம் கவனித்தாலும், இடைக்காலம் முதல் இன்றைக்கு வரை, ஆட்சி, அதிகரம், அந்தஸ்து, பணம் என்று சகலமும் பெற்று கோலோச்சி வருகின்ற வர்க்கத்தினர், குழுமங்கள், ஜாதியினர் யார்-யார் என்று கவனிக்கலாம்.


- அரசு மற்றும் தனியார் வேலைகளில் எத்தனை பிராமணர் கோலோச்சுகிறார்கள் என்று பார்க்கலாம். ஏனெனில், இன்று அவ்வாறு இருப்பவர்கள் பிராமணர் அல்லாதவர் தாம்.



- **<u>அரசியல் செல்வாக்கு</u>**: அரசர்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் நிர்வாகப் பணிகளில் முக்கிய பங்கு வகித்ததன் மூலம், அரசியல் அதிகாரத்தில் செல்வாக்கு செலுத்தினர்.
  - இதுவும் இப்பொழுது மாயை, கட்டுக் கதை, பொய் என்றாகி விட்டது. ஏதோ 10-20 பேர் தொடர்கிறார்கள், அவர்களுக்குப் பிறகு அப்பதவிகள் மற்றவர்களுக்குத் தான் செல்கின்றன.
  - பதவியில் இருந்தபொழுதும், அவர்கள் எத்தகைய விமர்சனங்கள், தூஷணங்களுக்கு உள்ளானார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்[3].
  - அதனால் தான், ஏதோ ஒப்புக்கு பிராமணர்களை நிறுத்துகிறோம் என்று ஒரு கட்சி முன் வந்துள்ளது[4].

Brahmin Genocide

THE PRECURSOR TO HINDU EXTINCTION



Asi

- **<u>மொழி ஆதிக்கம்</u>**: சமஸ்கிருத மொழியைக் கையாள்வதன் மூலம் அறிவுச் செல்வத்தை தங்கள் வசம் வைத்திருந்தனர்.
    - பாரசீகம், ஆங்கிலம் என்றுதான் 1500 வருடங்களாக ஆட்சி-அதிகார மொழிகளாக இருந்தன.
    - சமஸ்கிருதமே செத்த மொழி – செத்த பாடை என்றெல்லாம் பேசி வருகின்ற நிலையில், இவ்வாதம், எத்தகைய பொய்யானது என்பதை அரிந்து கொள்ளலாம்.
- சுருக்கமாக, கல்வியறிவு மற்றும் மதச் சடங்குகளின் மீதான கட்டுப்பாடு, பிராமணர்கள் சமூக படிநிலையில் மிக உயர்ந்த இடத்தைப் பிடிப்பதற்கு முக்கியக் காரணங்களாக அமைந்தன, என்று வாதங்கள் முடிக்கப் படுகின்றன. ஆனால், அவற்றில் பெரும்பாலனவை ஆதாரங்கள் இல்லாமல், வெறும் வாதங்கள் மூலம் கட்டமைக்கப் பட்டு, பிரச்சார ரீதியில் பரப்பப் பட்டு வருகின்றன.



<u>விண்ணப்பப் படிவத்திலேயே ஜாதி ஆரம்பித்து விடுகிறது</u>: சுதந்திரம் பெற்ற பிறகு, படிப்பு-வேலை முதலியன ஜாதியின் அடிப்படையில் அமைந்தன. எந்த படிவம், விண்ணப்பம் எடுத்தாலும் அதில் ஜாதி என்றதில் குறிப்பிடத்தான் வேண்டியுள்ளது. அதனை நீக்க எந்த சமத்துவவாதி, சமூகநீதி போராளி, எல்லோரும் ஒன்று என்றெல்லாம் பறைச்சாற்றும் எவருக்கும் துணிவில்லை, இதுவரை செய்யவும் இல்லை. மாறாக, ஜாதிவாரி ஜனத்தொகை எடுக்க வேண்டும் என்று கேட்டு வருகிறார்கள், அவ்வாறே வேலைகளும் நடக்கின்றன. தேர்தலிலும் அவ்வாறே தொகுதிகள் ஒதுக்கப் படுகின்றன. ஆகவே, சாதிய பாகுபாடு, அதிகாரப் பரவலாக்கல், கல்வியில் ஆதிக்கம் மற்றும் இட ஒதுக்கீடு கோரிக்கைகள் போன்ற காரணங்களால் இந்த பிராமண எதிர்ப்பு ஏன் – எப்படி – எவ்வாறு தொடர்கிறது, என்பது ஆராய வேண்டியுள்ளது.



BBC NEWS தமிழ் bbc.com/tamil/india-46308966

#SmashBrahmanicalPatriarchy - பிராமணர்களுக்கு எதிராக வெறுப்புணர்வும், சூழ்ச்சியும் வெளிப்படுகிறதா?

சிந்துவாசினி, பிபிசி இந்தி, 24 நவம்பர் 2018

#SmashBrahmanicalPatriarchy அதாவது "பிராமண ஆதிக்கத்தை ஒழிப்போம்" என்ற சொல்லாடல் தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகியிருக்கிறது.

பிராமண ஆதிக்கம் மற்றும் ஆணாதிக்கம் இந்த சொற்களை பயன்படுத்தும்போது சர்ச்சைகள் எழுவதற்கும் பஞ்சமேயிருப்பதில்லை.

இந்த முறை ட்விட்டரின் சி.இ.ஓ ஜாக் டோர்ஸி #SmashBrahmanicalPatriarchy என எழுதப்பட்ட பதாகையை கையில் வைத்துக்கொண்டு புகைப்படம் எடுத்துக் கொண்டது வெளிப்பட்டதால் பிரச்சனை பூதாகரமாகிவிட்டது.

அண்மையில் இந்தியாவுக்கு அவர் வந்திருந்தபோது சில இந்திய பெண்களை சந்தித்தபோது, அதில் ஒரு பெண் ஜாக்குக்கு பதாகை ஒன்றை பரிசளித்தார். அதை கையில் வைத்துக் கொண்டு அந்த பெண்களுடன் ஜாக் டோர்ஸே எடுத்துக் கொண்ட புகைப்படத்தை அந்த பெண் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்தார்.

ஒழிப்போம் (Brahminical Patriarchy) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதை அடுத்து சமூக ஊடகங்களில் விவாதங்கள் வலுத்துள்ளன.

"பிராமணர்களுக்கு எதிராகவும், பிராமணர்கள் மீதான வெறுப்பு மற்றும் பாரபட்சமான நடத்தை" என சமூக ஊடகங்களில் ஒரு பிரிவினர் விமர்சிக்கின்றனர்.

#Brahmins மற்றும் #BrahminicalPatriarchy என்ற ஹேஷ்டேகுகளில் ட்விட்டரில் பதிவுகளும், விவாதங்களும் சூடாகின. இதையடுத்து ட்விட்டர் நிர்வாகம் விளக்கமளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ட்விட்டர் இந்தியாவில் அளிக்கப்பட்ட விளக்கம் இது -"நாங்கள் அண்மையில் இந்தியாவில் பத்திரிக்கையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்தோம். அவர்களின் ட்விட்டர் அனுபவங்கள் பற்றி புரிந்து கொள்வதற்காக அவர்களுடன் பேசினோம். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் தலித் செயற்பாட்டாளர் ஒருவர் இந்த பதாகையை ஜாக்குக்கு பரிசாக கொடுத்தார்."

வெளியிடப்பட்ட இரண்டாவது பதிவில், "இது ட்விட்டருடைய பதிவோ அல்லது எங்கள் சி.இ.ஓவுடையோ கருத்தோ அல்ல. உலகம் முழுவதும் ட்விட்டர் போன்ற பொதுத்தளங்களில் நடைபெறும் கருத்து பரிமாற்றங்களின் அனைத்து கோணங்களையும் பார்க்கவும், கேட்கவும், புரிந்து கொள்வதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட ஆலோசனைக்கூட்டம் அது."

பிராமண எதிர்ப்பிற்கான முக்கிய காரணங்கள்: வர்ணாஷ்ரமம் என்று ஆரம்பித்து, கல்வியில் ஆதிக்கம் என தொடர்ந்து பல காரணங்கள் சொல்லப் படுகின்றன:

- **ஜாதி / சாதி ஆதிக்கம்**: பாரம்பரிய சமூக அமைப்பில் பிராமணர்கள் மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட்டனர், இது மற்ற சாதியினருக்கு இடையூறு விளைவிப்பதாகக் கருதப்படுகிறது. இவ்வாதமே பொய்யானது, ஏனெனில், மேலே குறிப்பிட்டப் படி, முக்கியமான பணம் ஈட்டும், ஆட்சி-அதிகாரம் கொண்ட வேலைகளில், தொழில்களில், பதவிகளில் பிராமணர்கள் இல்லை. ஷேட்டி, செட்டி, குப்தா, ஜெயின், தாகூர், ரெட்டி, நாயர், என்று மற்ற ஜாதியினர் தான் இருந்தனர். இன்றும் அந்நிலை தொடர்கிறது.
- **கல்வி மற்றும் வேலைவாய்ப்பு**: பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், கல்வி மற்றும் அரசு வேலைகளில் பிராமணர்களின் விகிதாச்சாரத்திற்கு அதிகமான பிரதிநிதித்துவம், பிற சமூகத்தினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. இப்படி வைக்கும் வாதமும், மற்ற ஆட்சி-அதிகாரம்-அந்தஸ்து வேலை-தொழில் என்று பார்த்தால், கணக்கிட்டால் பிராமணர் அல்லாதவர் தாம் அதிகமக இருந்தார்கள். இதனை அரசு ஆவணங்களிலிருந்தே அறிந்து கொள்லலாம். ஆனால், படிப்பு, அரசு உத்தியோகங்கள் என்று வைத்து, தீர்மானித்து, கருத்தியல் என்று உண்டாக்கி, அவ்வாறே விளக்கங்கள் கொடுக்கப் பட்டன, கொடுக்கப் பட்டு வருகின்றன.



- **<u>நீதிக்கட்சி இயக்கம்</u>**: 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்னிந்தியாவில், பிராமணரல்லாதோர் இயக்கம், அரசுப் பணிகளில் பிராமணர்களின் ஆதிக்கத்தைக் குறைக்கப் போராடியது. இதுவும் ஆட்சி-அதிகாரம்-பணம் சம்பாதிக்க ஏற்படுத்தப் பட்டதே அன்றி, எல்லோரும் படிக்க வேண்டும் என்று ஆரம்பிக்கவில்லை. அதனால் தான் இந்த இயக்கமே சிதறியது, மாறியது. ஜமீன்தார்களாக இருந்தவர்கள் (பனகல் போன்றவர்) அப்படியே தான் தங்களது ஆட்சி-அதிகாரம்-அந்தஸ்து முதலியவற்றை வைத்துக் கொண்டு இருந்தனர். "எல்லோரும் இந்நாடு மன்னர்" என்பதெல்லாம் மேடை பேச்சு, கோஷம் என்றநிலைகளில் தான் இருந்தன – இருக்கின்றன.



தினமலர் September 14, 2025, Added. 04.22 AM.
https://www.dinamalar.com/news/premium-news/dmk-campaign-strategy-seats-for-brahmin-community/4032538

பிராமண சமூகத்தினருக்கு வாய்ப்பு தேர்தலை எதிர்கொள்ள தி.மு.க. வியூகம்

– நமது நிருபர் –

சட்டசபை தேர்தலில், தி.மு.க., சார்பில் போட்டியிடுவதற்கு, பிராமண சமூகத்தினருக்கு வாய்ப்பளிக்கவும், நலிந்த பிராமணர்களுக்கு நல வாரியம் அமைக்கும் வாக்குறுதியை தேர்தல் அறிக்கையில் இடம்பெறச் செய்யவும், முதல்வர் ஸ்டாலின் ஆலோசித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தலைமையில், அ.தி.மு.க., செயல்பட்டபோது, பிராமண சமூகத்தினருக்கு, தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டது. அவர் மறைவுக்கு பின், அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமியும், கடந்த 2021 சட்டசபை தேர்தலில், பிராமணர் சமூகத்தினருக்கு, 'சீட்' வழங்கினார்.

தற்போது, 2026 சட்டசபை தேர்தலை, பா.ஜ., கூட்டணியுடன் அ.தி.மு.க., சந்திக்கிறது. எனவே, இரு கட்சிகளிலும், பிராமணர் சமூகத்தினருக்கு, 'சீட்' வழங்கப்படும். இந்நிலையில், தி.மு.க.,வில் பிராமணர் சமூகத்தினருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு தருவதில்லை என்ற அதிருப்தி நீடித்து வருகிறது.

எனவே, வரும் சட்டசபை தேர்தலில், 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற அடிப்படையில், பிராமண சமூகத்தினருக்கு 'சீட்' வழங்குமாறு, முதல்வரிடம் பிராமண சமூகத்தை சேர்ந்த பிரமுகர்கள் சிலர் விருப்பம் தெரிவித்துள்ளனர். பிராமண சமூகத்தினருக்கு சில தொகுதிகளை ஒதுக்கினால், 'சமூக நீதி, எல்லோருக்கும் எல்லாம்' என்ற இலக்கு நிறைவேறும் என, தி.மு.க., தலைமையும் கருதுகிறது.

மேலும், பிராமண சமூகத்தினரின் கோரிக்கையை நிறைவேற்றினால், அவர்களின் ஓட்டு தி.மு.க.,வுக்கு கிடைக்கும் எனவும், பிராமணர் நல வாரியம் அமைக்கும் கோரிக்கையை தி.மு.க., தேர்தல் அறிக்கையில் இடம்பெறச் செய்யவும், முதல்வர் ஸ்டாலின் ஆலோசித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து கட்சி வட்டாரங்கள் கூறியதாவது:

வரும் சட்டசபை தேர்தலில், அ.தி.மு.க., – தி.மு.க., இடையே கடும் போட்டி இருக்கும். வெறும் சில லட்சம் ஓட்டுகள் வித்தியாசம் கூட, ஆட்சியை நிர்ணயிக்கும் சூழல் ஏற்படும். தமிழகத்தில் பிராமண சமூகத்தினர், 40 லட்சம் பேர் உள்ளனர். இவர்களில், 5 லட்சம் பேர் வறுமை நிலையில் உள்ளனர். எனவே, பிராமணர்களின் ஓட்டுகளை கவர, தி.மு.க., திட்டம் வகுத்துள்ளது.

ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மாநிலங்களில், நலிந்த பிராமணர்களின் கல்வி, சமூக மேம்பாட்டிற்காக, 'பிராமணர்கள் நல வாரியம்' அமைத்து, 50 கோடி ரூபாய் வரை வழங்கி உள்ளனர். அதே போல், முதல்வர் ஸ்டாலினும் வழங்கினால், நலிந்த பிராமணர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், தி.மு.க.,வுக்கு ஆதரவாக மாறுவதோடு, அது தி.மு.க., ஆட்சி அமையவும் உதவும்.

எனவே, பிராமணர் ஓட்டு வங்கிக்காக, தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவது உட்பட அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது குறித்து, தி.மு.க., தலைமை ஆலோசித்து வருகிறது.

இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash

Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash

தமிழ்.இந்து, *பிராமணருக்கு எதிரான பேச்சை தடுக்க கோரிய மனு தள்ளுபடி*, செய்திப்பிரிவு, Updated on: 21 Mar 2026, 8:40 am
https://www.hindutamil.in/news/india/petition-seeking-to-ban-anti-brahmin-speech-dismissed

பிராமணருக்கு எதிரான பேச்சை தடுக்க கோரிய மனு தள்ளுபடி


புதுடெல்லி

உச்ச நீதிமன்றத்தில் மகாலிங்கம் பாலாஜி என்பவர் தாக்கல் செய்த பொதுநல மனுவில், "பிராமண சமூகத்தை குறிவைக்கும் வெறுப்பு பேச்சை சாதிய பாகுபாடு குற்றமாக கருத வேண்டும். பிராமண சமூகத்துக்கு எதிராக எம்.பி., எம்எல்ஏக்கள் மற்றும் அமைச்சர்கள் வெறுப்பு பிரச்சாரம் செய்தால் அவர்களை தகுதி நீக்கம் செய்ய உத்தரவிட வேண்டும்" என்று கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் பி.வி. நாகரத்னா, உஜ்ஜல் புயன், இது போன்ற சம்பவங்களுக்கு எதிராக உரிய அமைப்புகளிடம் புகார் அளிக்கலாம் என்று அறிவுறுத்தி மனுவை தள்ளுபடி செய்தனர்.

Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash


Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash
Supreme Court Dismisses Plea To Curb "Brahmophobia" & Hate Speech Against Brahmin Community
Live Law
20
20 MAR | FRIDAY
Law Beat
'NO HATE SPEECH AGAINST ANY COMMUNITY':
Supreme Court Declines Plea To Recognise 'Brahmophobia' As Punishable Offence
பிராமணர்களுக்கு எதிராக வெறுப்பு அல்லது வன்முறையைத் தூண்டும் பிரச்சாரங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒருங்கிணைந்து நடத்தப்படுகின்றன
Supreme Court Rejects Plea on 'Brahminphobia', Says Existing Laws Are Enough
COURTFLIX
Supreme Court rejects plea to ban "Brahminphobia" and hate speech against the Brahmin community
Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash


Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash
பிராமண எதிர்ப்பு-காழ்ப்பு-
துவேஷம் – தொடர்ந்த வழக்கை
உச்சநீதி மன்றம் தள்ளுபடி செய்தது!
Kushal Mehra
FUELING BRAHMIN
HATRED IN AMERICA
BRAHMINS
ANALYSIS
UNDER THREAT!
Vedaprakash Vedaprakash Vedaprakash Vedaprakash

பிராமண சமூகத்திற்கு எதிரான வெறுப்புப் பேச்சுக்களை (Brahmophobia) சாதிய பாகுபாடாகக் கருதி, அதைத் தடுக்க சிறப்புச் சட்டம் கோரிய பொதுநல மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

நீதிபதிகள் பி.வி.நாகரத்னா மற்றும் உஜ்ஜல் புயான் அமர்வு, குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்காக மட்டும் சட்டம் இயற்ற முடியாது என்றும், வெறுப்புப் பேச்சு ஒட்டுமொத்த சமூகத்திற்கும் எதிரானது என்றும் கூறி, மனுவை வாபஸ் பெற அனுமதித்தது.

தகுந்த மன்றங்களை (உயர் நீதிமன்றம் அல்லது கீழ் நீதிமன்றம்) அணுக மனுதாரருக்கு அனுமதி அளிக்கப்பட்டது.



விக்கிமூலம்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%86%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D:%E0%AE%95%E0%AF%81%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9F%E0%AE%BF_%E0%AE%85%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%95%E0%AE%B3%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D#

ஆசிரியர்:குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி அடிகளார்
(1925–1995)

குன்றக்குடி அடிகள் சமயம், இலக்கியம், மட்டுமன்றி பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர்

,tuJ E}y;fSf;fhd ,izajsq;fs;
<z;L jug;ngw;Ws;sd.



சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

கலைவாணி புத்தகாலயம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/2, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்,
தியாகராயநகர், சென்னை-600 017.

கலைவாணி புத்தகாலயம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/2, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்,
தியாகராயநகர். சென்னை-600 017.

கலைவாணி வெளியீடு K 483

முதற்பதிப்பு : டிசம்பர், 1993

முன்னுரை

மனித சமுதாயம் வளர்ச்சிக்குரியது; மாற்றத்திற்குரியது. வளர்ச்சி. மாற்றத்திற்கு அடிப்படை. மாற்றம். வளர்ச்சியின் அளவுகோல். ஒரே வழி வளர்ச்சி இல்லாத மாற்றங்களும் நிகழ்வதுண்டு. இவை, புற நிலை மாற்றங்களேயாம் ; அகநிலை மாற்றங்கள் அல்ல.

மானுடத்தின் வாழ்நிலையில், அகநிலையில் ஏற்படும் மாற்றங்களே மானுடத்தின் குறிக்கோள்களை இனம் காட்டும்; நாகரிகத்தை நல்கும்; பண்பாட்டைத் தோற்றுவிக்கும்.

தமிழினம் காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள இனம். தமிழிலக்கியங்கள் காலந்தோறும் தமிழினத்திற்குச் சிறந்த குறிக்கோள்களை வழங்கி வந்துள்ளன. தமிழினம் ஓரினமாக வாழ்ந்து வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை.

தமிழினத்தில் இனமானம், குடிசெயற்பண்பு மிகவும் குறைவு என்பதைத் திருக்குறள் வாயிலாக அறிய முடிகிறது. ஆதலால், தமிழினம் சமுதாயக் கூட்டு வாழ்வில் சாதனைகள் செய்ய இயலாது போனாலும் தனிமனித வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் தமிழினம் சிறந்து விளங்கியது; விளங்கிக் கொண்டிருக்கிறது. இது மறுக்க முடியாத உண்மை.

ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இனமான உணர்வு தலையெடுத்து வளர்ந்தது; சங்க காலத்தில்:

“ஒரு வீரர் தோற்பினும் தோற்பதுங் குடியே!” என்று கோவூர் கிழார் இன உணர்வை அறிமுகப்படுத்தினார். அடுத்து, காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் சோழனும் பாண்டியனும் ஒருங்கிருந்த காட்சியைக் கண்டு பெருமிதமுற்று’

“இன்றே போல்க, நும் புணர்ச்சி!”

என்று வாழ்த்தினார். தமிழ்ச் சமுதாயக் கட்டமைப்புக்குத் தடையாக இருந்த சாதி, குல, வேற்றுமைகளை அப்பரடிகள் சாடினார். ஒருகுலம் காண முயன்றார். இங்ஙனம் முறையாக வளர்ந்து வந்த சமுதாய உணர்வு தலைவர் பெரியார் காலத்தில் எழுச்சி பெற்றது.

இந்த வரிசையில் நமது தலைமுறையில் வாழும் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், கவிஞர்களின் படைப்புகளைப் பற்றி எழுதப்பெற்ற நூல் இது.

நம்மிடம் மிகவும் பாதிப்பை ஏற்படுத்திய கவிஞர் குலோத்துங்கன், தொ.மு.சி.ரகுநாதன் புரட்சிக்கவி பாரதி, முற்போக்குச் சிந்தனையாளர் ஜெயகாந்தன் ஆகியோரின் படைப்புக்களைப் படித்த அனுபவத்தின் விளைவு இந்த நூல்.

இவர்களுடைய முற்போக்குச் சிந்தனைகளைத் தமிழக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்ற ஆர்வத் துடிப்புடன் எழுந்தது இந்நூல்.

ஆயிரம்தான், முற்போக்குச் சிந்தனை இருந்தாலும் இன்றைய சூழ்நிலையில் தமிழினத்திற்கு பேரறிஞர் அண்ணாவின் இனமான உணர்வு தேவை என்பதையும் உணர்ந்து பேரறிஞர் அண்ணாவின் படைப்புகள் பற்றியும் எழுதப் பெற்றுள்ளது.

பேரறிஞர் அண்ணா காலத்தில் தமிழர்களுக்கிடையில் இன உணர்வு வளர்ந்தது; உறுதிப்பட்டது. பேரறிஞர் அண்ணாவைப் போல் தமிழின உணர்வுக்குத் தமிழ்நாட்டு வரலாற்றில் முன்னும் யாரும் இல்லை. இனிமேலும் தோன்றுவார்களா என்பது ஐயப்பாடே! இங்ஙனம் தமிழ்ச் சமுதாய அமைப்புக்கு உரமூட்டும் வகையில் எழுதப்பெற்றுள்ளது.

வழக்கம்போல் நமது நூல்களை வெளியிடுவதில் குடும்பப் பாங்குணர்வுடன் நோன்பெனக் கருதிச் செய்யும் இனிய அன்பர் கலைவாணி புத்தகாலய உரிமையாளர் கவிஞர், கெழுதகை நட்புக்குரிய திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்களுக்கு நன்றி பாராட்டு வாழ்த்துக்கள்!

பலரும் புத்தகத்தை வாங்கிப் படிப்பார்கள், பயனடைவார்கள். தமிழினம் ஓரினமாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

குன்றக்குடி அடிகளார்.

27-12-93

அணிந்துரை

கலைமாமணி, தமிழ்மறைக் காவலர்,
திருக்குறளார், வீ. முனிசாமி,

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் வானொலியில் ஆற்றிய இலக்கியப் பேருரைகளே "சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள்" என்னும் அழகான நூலாக கலைவாணி வெளியிட்டுள்ளது.

சமுதாய மறுமலர்ச்சி என்றால் என்ன என்பதை தவத்திரு. அடிகளார் அவர்கள். சங்கப் பாடல்களையும், திருக்குறளையும் எடுத்துக்காட்டி விளக்கும் திறன் மிகவும் அருமையானது.

திருக்குறள் முழுக்க முழுக்க மறுமலர்ச்சி இயக்க படைப்புக் கருவியாகும் (பக் 12) அடிகளார் அவர்களின் எண்ணவோட்டம் பாராட்டத்தக்கது. சமுதாய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட, கவிஞர்கள், புதின ஆசிரியர்கள் சிலரை நினைவு கூர்ந்து விளக்கும் திறன், பரந்து விரிந்த நூலறிவாற்றலை தெற்றென காட்டுகிறது.

ஆன்மிகம், சமுதாயம், இலக்கியம், அரசியல் இன்ன பிற துறைகளிளெல்லாம் புரட்சிகரமான அறிவியல் கருத்துக்கள் பயன்

தரும் வகையில் செயலாற்றி அருளும் தமிழ் மாமுனிவர் தவந்திரு. குன்றகுடி அடிகளார் அவர்களுக்கு மக்கட் சமுதாயம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

பாரத ஒருமைப்பாட்டிற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் புகழ்சேர்க்கும் படைப்புகளை மட்டுமே வெளியிட்டு வரும் நமது நண்பர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் அனைவரின் பாராட்டுக்கும் உரியவர்கள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதற்கு இலக்கணமாகத் திகழும் தவத்திரு அடிகளார் அவர்களுக்கு எனது வணக்கங்கள்.

திருக்குறளார்.

சென்னை.

28-32-93

பதிப்புரை

உலக வரலாற்றின் மாற்றங்களுக்கும், மேன்மைகளுக்கும் வழிகாட்டுவன சமுதாய மறுலர்ச்சி இலக்கியங்களே. போர்வாளினும் வலிமை மிக்கது பேனா மன்னர்கள் இயற்றிய சிறந்த இலக்கியங்கள்.

உலக ஒருமைப்பாட்டிற்கும். பண்பாட்டிற்கும் புகழ் சேர்ப்பன, தீர்க்கதரிசனமாக மகான்களும் அறிஞர்களும் அருளிய இலக்கியங்களே. உலக மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், வழிகாட்டுவன.

அறிவியல் முன்னேற்றத்திற்கும். சமுதாய மறுமலர்ச்சிக்கும் இலக்கியங்கள் வழிநடத்தும் தன்மைகளை, தவத்திரு அடிகளார் அவர்கள் விளக்கி செயலாற்றும் பாங்கினை எண்ணிஎண்ணி மகிழ்கிறேன்.

உலகம் போற்றும் குன்றக்குடி பசுமைப் புரட்சி திட்டத்தை உருவ்ரிக்கி வெற்றிகர்மாக செயலாற்றி அருள்வதும் தமிழகத்தின் தவப்பியனே யாகும்.

அறிவியல் துறையில் பல முன்னேற்றங்களை கொண்டுள்ள நாம், ஆன்ம நேய ஒருமைப்பாட்டிலும், பண்பாட்டிலும், போதிய கவனம் செலுத்தின், உலகம் முழுவதும் சமுதாய மறுமலர்ச்சியைக் கண்டு மகிழலாம்.

தவத்திரு, அடிகளார். அவர்களின் சமுதாயப்பணி நாளும் சிறந்த பயனளித்து வருவது கண்கூடு, தவத்திரு. அடிகளார் அவர்களுக்கு நாம் செய்யும் கைம்மாறு, திருக்குறள் நெறிவழி சமுதாயும் தழைக்க இலக்கியங்கள் காட்டும் நெறிவழி ஒழுகி மகிழ்வதே.

அணியென அணிந்துரை அளித்தருளும் கலைமாமணி, திருக்குறளார் அவர்களுக்கும் உழுவலன்புக் கவிஞர். மரு. பரமகுரு அவர்களுக்கும் அரும் பணியாற்றும் அன்பர்களுக்கும் இதய நன்றி.


அனைவருக்கும் இந்நூல் பயன் கூட்டிட கலைவாணியின் திருவருளை வேண்டுகிறேன்.

சீனி. திருநாவுக்கரசு

பதிப்பாசிரியர்.

சென்னை 17

28-12-1993



https://ta.wikisource.org/wiki/%E0%AE%95%E0%AF%81%E0%AE%B1%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%86%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B5%E0%AE%AE%E0%AF%8D

மதிப்புரை

வள்ளுவன் குறளை வையகம் முழுதும் அறியும். தமிழிலும் ஆங்கிலத்திலும் வந்துள்ள விளக்கமும் அதிகம். வாழ்க்கையின் அடிமுதல் நுனிவரை அளந்து காட்டக் கூடிய ஒரே நூல் திருக்குறள். மனித வாழ்க்கை மூன்று துறைகளில் போகிறது என்பதைத்தான், 'அறம் பொருள் இன்பம்' என்ற பகுப்பு நமக்குக் காட்டுகிறது.

வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஏதாவது ஒரு திருக்குறள் எதிரொலிக்கிறது.

தோண்டத் தோண்டச் சுரக்கும் ஊற்றுப்போல், படிக்கப் படிக்கப் புதிய பொருள்களைக் காட்டுகிறது திருக்குறள். வேறு எந்த மொழியிலும், இவ்வளவு தெளிவான ஒரு நீதி நூல் இருக்குமா என்பது சந்தேகமே.

பேராசிரியர்களின் வழியில் வள்ளுவரின் கண்ணோட்டத்தை ஆராய்கிறார் தவத் திரு குன்றக்குடி அடிகளார். நடையின் எளிமை, படிப்பதைச் சுலபமாக்குகிறது. அடிகளாரின் திறனாய்வு நடை, பாமரனும் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது.

ஒரு குறளுக்கு ஒரு தலைப்பு என விளக்கம் தருவது புதிய முறை. பெரும்பாலும், ஓர் அதிகாரத்துக்கு ஒரு தலைப்பு என்ற முறையில்தான், மற்றவர்கள் எழுதி உள்ளனர். எல்லா குறள்களுமே பொருள் உள்ளவை தான் என்றாலும், சாாசரி மனிதனின் தினசரி வாழ்க்கையில் ஒட்டிவரும் குறள்கள், தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டியவை.

ஆயிரத்து முந்துாற்று முப்பது அரும் குறள்களில் நாம் தேடி, சாறு திரட்டிக் கொண்டிருக்கும் வேலையை, கலபமாக்க –தாமே திரட்டித் தந்திருக்கிறார் அடிகளார்.

வாழ நினைப்பவர்களுக்கு வழி காட்டும் நூல் இது. பொருட் செறிவுள்ள நூல்களை வெளியிடும், **'கலைவாணி புத்தகாலயம்'** உரிமையாளர் நண்பர் சீனி. திருநாவுக்கரசு அடக்கம் மிக்கவர். ஆழ்ந்த கருத்துகளில் பற்றுள்ளவர். ஒவ்வொரு வீட்டிலும் புத்தக நிலையத்திலும் இருக்க வேண்டிய சிறந்த நூல் இது.

சென்னை-17அன்பன்,

11-4-74

கண்ணதாசன்.

அணிந்துரை

குருமகா சந்நிதானம் சீலத்திரு
ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

'குறட் செல்வம்' எனப் பெயருடைய தமிழுரைச் செய்யுள், திருவள்ளுவர் அருளிய பாச் செய்யுளை ஆராய்ந் தெழுதியதாகும். நாற்பத்தேழு தலைப்பில் குடிமை, ஊழ், மொழியுறவு, மக்கள், அறம், பொருள், இன்பம், வீடு முதலிய பல பொருள் குறித்த நுண்பொருட் பெருந் திறனாய்வுக் கட்டுரைத் தொகுப்பாய் விளங்கிக் கற்போர் அறியாமையைக் களைந்து, மெய்ப் பேறறிவை வளர்ப்பதாக உள்ளது. இச் செந்தமிழ்ப் பனுவல்.

இதன் ஆசிரியர் குன்றக்குடி அடிகளார் என வழங்க விளங்கும் திருவண்ணாமலை ஆதீன குருமகா சந்நிதானம் சீலத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், மதி நுட்பம் நூலோடு உடையார்; நுண்மாண் நுழைபுலம் மிக்க சான்றோர்: சொற்பொழிவில் வல்ல பொருட்பொழிவாளர்; பற்பல பனுவல் எழுதிய ஆசிரியர், அவர்கள் சீலத்தை அறிந்து கொள்ள விழையும் அன்பர்

அனைவரும் இதில் 34 ஆவது தலைப்பின் (பக்கம்.117) முடிவுரையை நோக்குதல் இன்றியமையாதது.

நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையாயது யாது! அதைத் தங்களது கடனாகக் கொண்டு உலகிற்கு ஆற்றும் நெறிவழுவாத அவர்களே இன்ன சீரிய நூல் ஆக்கத்திற்கு உரியவர்கள். அவர்கள் நீடினிது வாழ்க. இன்ப அன்பாகிய சிவானுபூதியில் திளைக்க.

இவ்வாசிரியர் நூல்களை வழக்கமாக மிக்க சிறப்புடன் அழகாக வெளியிட்டு வரும் கலைவாணி புத்தகாலயத்து முதல்வர், நிறைநாட் செல்வர், சீனி. திருநாவுக்கரசு அவர்கள் இச் செல்வத்தையும் மற்ற எட்டுச் செல்வத்தையும் எய்தி நன்கு வாழ்க!

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள்.

மெய்கண்ட தேவர் ஆதீனம்
காஞ்சிபுரம்

முன்னுரை

திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள், மறையெனப் போற்றத்தக்கது; நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் உரிய ஒப்பற்ற சமயத் தெளிவினைத் தரும் தெள்ளு தமிழ் மறை; உலகப் பொதுமறை.

திருக்குறள், கடவுள் நம்பிக்கையை ஒத்துக்கொள்கிறது. அந்தக் கடவுளை நிறை குணங்களின் உருவமாகவே படைத்துக் காட்டுகிறது; ஆயினும், உயிர்க்குப் பற்றுக் கோடாகத் திகழ வேண்டும் என்ற அடிப்படையில் திருவடியைக் காட்டுகிறது. இறைவன்றன் திருவடியைப் பேசுதல் – பற்றுதல் அருள் முதிர்ந்த நிலையாகும்.

திருக்குறளுக்கு உயிர் உண்டு என்ற கொள்கை உடன்பாடு. இந்த உயிர் ஒன்றல்ல, பலப்பல என்பதைப் பன்மை விகுதியிட்டுக் குறிப்பிட்டதனாலேயே அறிய முடிகிறது. அதோடு உயிர் இயல்பிலேயே அறியாமை உடையது என்பதும், உயிர் முயன்று அறிவினைப் பெற்று உயர முடியும் என்பதும், திருக்குறள் கொள்கை.

வானோர்க்கும் உயர்ந்த உலகம் அடையும் வழி காட்டும் அருள் நூல். திருக்குறள் பயிற்சி, தெளிந்த அறிவைத்தரும். பிறப்பின் அருமை காட்டி, பிறப்பின் பயன் கூட்டும் பேரற நூல். திருக்குறள் ஒழுக்கம் உயர்வு நலஞ்சான்ற ஒழுக்கமாகும். வாழ்க்கையில் ஏற்று ஒழுகுதல், இன்ப அன்பினைத் தரும்; இறையருளில் சேர்க்கும். அனைவரும் திருக்குறள் பயில்க! குறள் நெறியை வாழ்க்கையில் பயில்க! வாழ்த்து!

நமது நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டுவரும் கலைவாணி புத்தகாலயத்தாருக்கு நன்றி! கலைவாணி புத்தகாலய உரிமையாளர்_திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் நல்ல பதிப்பாசிரியர், கவிஞர், எழுத்தாளர். ஆக்கம் கருதாது பதிப்புத்தொழிலில் மக்கள் நலம்

கருதியே ஈடுபட்டிருப்பவர் 'கலைவாணி' சீனி. திருநாவுக்கரசு அவர்களுக்குப் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள். இன்ப அன்பு.

– குன்றக்குடி அடிகளார்.

பதிப்புரை

வள்ளுவரின் திருக்குறள், வாழ்க்கையின் ஒளிவிளக்கு.

உலக அரங்கில் தமிழ் நாட்டிற்கு மிகச் சிறந்த மதிப்பைத் தருவது பொதுமறையாகத் திகழும் தனிச் சிறப்புடைய திருக்குறளே.

திருக்குறளுக்குப் பல்வேறு விளக்கங்களும் விரிவுரைகளும் வந்திருந்த போதிலும், அனைவரும் எளிதிற் கற்று, தேர்ந்து ஒழுகி வாழ்க்கையில் மேன்மையுற மிகச் சிறந்த மேற்கோள்களுடனும், விரும்பி ஏற்கும் விளக்கங்களுடனும் வாழ்க்கைக்கியைந்த கருத்துக் கருவூலமாக **'கலைவாணி'** புத்தகாலயத்தின் மிகச் சிறந்த திறனாய்வு நூலாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உலக மக்களின் சமுதாயச் சிறப்பினைக் கண்டு மகிழவும், வள்ளுவர் வழி மக்கள் தொண்டே மகேசன் தெர்ன்டு எனவும், என் கடன் பணி செய்து கிடப்பதே எனவும் நாளும் சலியாது சிறப்புற பணியாற்றும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கு மக்கட் சமுதாயமே மிகவும் கடமைப்பட்டிருக்கின்றது.

வாழ்க்கைக்கு வளம் தரும் அறநெறிக் கருத்துக்களை மக்களுக்குப் பயன் தரும் முறையில் எளிய இனிய நடையில் ஏற்றம் தரும் வகையில் தந்தருளியுள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கு இதய நன்றி.

அரியதோர் அணிந்துரை அளித்து ஆசிவழங்கி அருளும் காஞ்சி மெய்கண்ட தேவர் ஆதீன குரு மகா சந்நிதானம் சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கும் மதிப்புரை தந்த மகிழும் கவியரசுக் கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கும் இதய நன்றி.

மாந்தருலகம் இச்சிறந்த திறனாய்வு நூலை விரும்பி ஏற்றுப் பயன் பெற்று மகிழ எல்லாம் வல்ல கலைவாணியின் திருவருளை வேண்டுகின்றேன். ।

கலைவாணி புத்தகாலயம்–**சீனி, திருநாவுக்கரசு**
தி. நகர், சென்னை-17.பதிப்பாசிரியர்



https://ta.wikisource.org/wiki/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%88_%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D

உ

சிவ சிவ

முன்னுரை

திருவருள் திரு
தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக
பரமாசாரிய சுவாமிகள், ஆதீனகர்த்தர்
திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி 630 206

அருள் நெறித் தந்தை குருமகா சன்னிதானத்தின் பொன்மொழிகள் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு தாரக மந்திரங்கள்.

சுழன்றடிக்கும் காற்று இல்லாத பொழுது சிறிய அளவு சூடம்கூட எரியும், காற்று வேகமாக அடிக்கும் பொழுது எரியக் கூடிய அளவு சூடம் இருந்தாலும் அணைந்துவிடும்.

அதுபோல நெருக்கடியும் துன்பங்களும் இல்லாத பொழுது வேலையின் அளவும் தாமும் குறைந்தாலும் ஆபத்து வந்துவிடாது.

நெருக்கடி நிறைந்துள்ள போழ் தில் கடுமையாக உழைத்தால் மீளமுடியும்.

உழைப்பு ஒன்றே ஆன்மாவை ஈடேற்றும் வழி என்பதை, இதைவிட அற்புதமாக வேறு எப்படி சொல்ல இயலும்? .

இந்துக்கள் ஒருமைப்பட வேண்டும் என்ற ஆர்வத்தில் தவறு இல்லை. ஆனால், அந்த ஆர்வம் உண்மையான இந்துக்கள் ஒற்றுமையாக

இருப்பதற்கு பதிலாக மீண்டும் சாதி மேலாதிக்கம் கொள்ள முயல்கின்றது.

இந்த வைர வரிகள் இந்து சமயத்தில் சாதியத்தின் ஆதிக்கத்தை பறை சாற்றுகின்றது. இதற்குரிய தீர்வும் சொல்லப்படுகிறது.

திருவள்ளுவரையும், வள்ளலாரையும் பின்பற்றாததால்தான், நம் நிலை தாழ்ந்தது, என்று அருள்நெறித் தந்தை அருமையாகக் கூறுகின்றார்கள்.

அருள் நெறித் தந்தையின் பாதை, மானுடத்தை தேவநிலைக்கு உயர்த்த வழிகாட்டும் பாதை.

எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை என்ற நிலையை இந்தியா உலகிற்கு அளிக்கும் என்ற ஆன்மீகப் பாதை.

சிறந்த ஆன்மீகப் பாதையில் பயணம் தொடர தமிழ் கூறும் நல்லுலகில் தாரகமந்திரமாய் அருள் நெறித் தந்தையின் அமுத மொழிகள் பயன்படும்.

இந்த அமுதமொழிகளைத் தொகுத்துத் தந்த நம் ஆதீனப்புலவர் திருமிகு மரு. பரமகுரு அவர்களுக்குப் பாராட்டுக்கள், நல்வாழ்த்துக்கள்.

அருள்நெறித்தந்தை, தமிழ்மாமுனிவர் குருமகா சந்நிதானத்தின் பொன்மொழிகளை அச்சில் கொண்டுவரும் அருமை கலைவாணி பதிப்பகக் கவிஞர் சீனி திருநாவுக்கரசு அவர்களுக்கு நெஞ்சு நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

குன்றக்குடி

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

11-7-97

பொன்னம்பல அடிகளார்.

அணிந்துரை

“வானொலி புகழ்”
தென்கச்சி. கோ. சுவாமிநாதன்

“அந்த ஆள் ரொம்பவும் திறமைசாலி! இந்த ஆள் ரொம்பவும் சாமர்த்தியசாலி!” என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இவர்கள் இரண்டு பேர்களுக்கும் என்ன வித்தியாசம்?

இப்படி ஒரு கேள்வியை உங்களைப் பார்த்து யாராவது கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? “அவசரமா கொஞ்சம் வேலையிருக்கு... அப்புறமா வந்து சொல்றேன்!” என்று சொல்லிவிட்டு அந்த இடத்தைவிட்டு நழுவத்தான் தோன்றும் நம்மில் பலருக்கு! சிந்தனைத் துளிகள் புத்தகம் நம் கையில் இருந்தால் நழுவவேண்டிய அவசியம் ஏற்படாது.

“சாமர்த்தியமும், திறமையும் ஒன்றல்ல” என்கிறார் தவத்திரு அடிகளார்.

“சாமர்த்தியம், எப்படியும் காரியத்தை சாதிப்பது” திறமை முறைப்படி சாதிப்பது” என்பது அவர் விளக்கம். .

“நம்ம எதிரியோட பழகுகிறவன் நமக்கும் எதிரி!” என்பதுதான் நம்முடைய கண்ணோட்டம் என்கிறார். “எனக்கு நண்பராக இருந்தால் போதாது... எனது பகைவருக்கு விரோதியாகவும் இருத்தல் வேண்டும் என்று எதிர்பார்ப்பது விரும்பத் தக்கதல்ல.”

இப்படி எத்தனையோ அருமையான கருத்துரைகள் அவ்ற்றையெல்லாம் அழகான நூலாக்கித் தருகிறார்... தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அன்பிற்குரியவரான கவிஞர் கலைவாணி சீனி திருநாவுக்கரசு அவர்கள்.

நல்வாழ்த்துக்கள்

சென்னை-4

அன்புடன்

6-7-97

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

பதிப்புரை

உலக உயிர்களில் உயர்ந்து செயலாற்றி மகிழும் பேறு, மனித குலத்திற்கு மட்டுமே இறைவன் அருளிய அருட்கொடை..

மனிதன், மனிதம் என்ற புனிதத் தன்மையுடன் வாழவும், வாழ்விக்கவும் மகான்களின் சிந்தனைகளே உறுதுணை.

உலகம் உய்யத் தோன்றிய மகான்கள், சித்தர்கள் அருளிய அருட் சிந்தனைகள், வாழ்த்கைக்கு வளம் தருவன. உயிர்க்கும், உள்ளத்திற்கும் உறுதி சேர்ப்பன. இம்மை, மறுமை நலன்களை அளிப்பன.

உண்பித்து உண், வாழ்வித்து வாழ், மகிழ்வித்து மகிழ் எனும் திருக்குறள் நெறி உலகெலாம் நிலவி மகிழ, நாளும் தன் தவானுபவத்தால் அப்பரடிகளாக வாழ்ந்து காட்டிய தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அருளிய அருட்சிந்தனைகளின் தொகுப்பே இந் நன்னூல்.

இச்சிறந்த சிந்தனைச் செல்வத்தை வாழ்வில் கொண்டு ஒழுகுவதே தமிழ் மாமுனிவர் அடிகளாருக்குச் செய்யும் சிறந்த கைம்மாறாகும். தொண்டே வாழ்வாய், வாழ்வே தொண்டாய் வாழ்ந்தும், வாழ்வித்தும், என்றும் தோன்றாத் துணையாக அருளும் அடிகளாரின் பொன்னார் திருவடிகளை வணங்கி மகிழ்கிறேன்.

தமிழ் மாமுனிவர் அடிகளாரின் திருவுருவிலும் திருவுளப் பாங்கிலும் முழுமதியென உலா வந்தருளி முத்தான முன்னுரை வழங்கி அருளும் தவத்திரு. பொன்னம்பல குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கும், ஆதீனப் புலவர் மாமனிதர் மரு. பரமகுரு அவர்கட்கும், மகிழ்வுரை அளித்துள்ள “மனிதநேயச் செல்வர்” புலவர் வீ. செ. கந்தசாமி அவர்களுக்கும்,

அணிந்துரை வழங்கியுள்ள மனிதநேய மாமணி தென்கச்சி கோ. சுவாமிநாதன் அவர்களுக்கும் என் நெஞ்சுகந்த நன்றி.

தியாகராயநகர்

என்றும் அன்புடன்

சென்னை-17

சீனி. திருநாவுக்கரசு

மகிழ்வுரை

வீ. செ. கந்தசாமி, எம்.ஏ., பி.லிட்., எல்.எல்.பி,
தலைவர், திருக்குறள் பேரவை, சென்னை மாவட்டம், தமிழ்நாடு
நுகர்வோர் குறைதீர் ஆணைய முதல் உறுப்பினர், துணைத் தலைவர்,
அ. இ. தமிழ் எழுத்தாளர்கள் சங்கம்.

ஆன்மிகவாதியாகவும், அரசியல் ஞானியாகவும், அறிவியல் சிந்தனையாளராகவும், சமுதாய சீர்திருத்தவாதியாகவும் விளங்கி, இறையருளில் கலந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், மகேசனிடம் பக்தி பூண்டதோடு நில்லாமல், மக்களையும் உள்ளன்புடன் நேசித்தவர்.

அவர், காவியணிந்த பொதுவுடைமைவாதி. சமய வழியில் மக்களிடையே ஒப்புரவு காணமுடியும் என்று உறுதியாக நம்பியவர்.

மடமையையும், அறியாமையையும், மட்டுமல்ல வளர்ச்சிக்கு வகை செய்யாத பழமையையும் சாடிய சமுதாய சிற்பி.

இனிவரும் உலகில், அறிவியல் துறையில் ஒரு மொழி வளர்ச்சியடைவதே அம்மொழி பேசும் மக்கள் மேம்பாடடைவதற்கு வழி என்றுரைத்த நுண்ணிய அறிவியல் சிந்தனையாளர்.

ஒரு சைவ மடத்தின் மகா சந்நிதானமாக விளங்கிய அவர்கள், திருக்குறள் பேரவை, அருள் நெறித் திருக் கூட்டம் போன்ற பல இலக்கிய, சமுதாய, சமய அமைப்புகளைத் தோற்றுவித்து நடத்தியதுடன், பல கல்வி நிலையங்களையும், ஏதிலியர் இல்லங்களையும் நடத்தினர்கள்.

தவத்திரு அடிகளாரே ஒரு இயக்கம்; அவர் ஒரு தனி மனிதரல்லர்.

அவர்கள் அருளிய கருத்து மணிகளில் பலவற்றைத் தேர்ந்து எடுத்து, நூல் வடிவில் கொண்டு வந்துள்ள நண்பர் சீனி. திருநாவுக்கரசு ஒரு கவிஞர்.

“ஆய்வு இல்லாத பணியில் வளர்ச்சி இராது (1404); பொது மக்கள் ஏமாளிகளாக இருக்கும்வரை ஆட்சியாளர்கள் யோக்கியர்களாக மாட்டார்கள் (862); தவறுகளை நியாயப்படுத்துவதே குற்றம். சமயங்கள்

மாறுபடா; சமயவாதிகள் மாறுபடுவர் (533)". இவை கவிஞர் சீனி திருநாவுக்கரசு அவர்கள் தேர்ந்து எடுத்து நமக்களித்துள்ள மணிகளில் சில.


தவத்திரு அடிகளாரின் கருத்து மணிகள் செறிந்து மிளிரும் இந்த அரிய நூலைத் தமிழினம் ஏற்றுப் பயனடையும் என்பதில் நம்பிக்கை எனக்குண்டு.

பழங்களைச் சுவைத்துப் பார்த்து, நல்ல பழங் களை மட்டுமே காவிய நாயகன் இராமனுக்கு நல்கி மகிழ்ந்த மாது சபரியைப் போல, நல்ல நூல்கள் எவை எனத்தேர்ந்தெடுத்து பதிப்பித்து நாட்டுக்களித்து வரும் அன்பு நண்பர் கவிஞர் சீனி. திருநாவுக்கரசு அனைவரின் பாராட்டுக்கும் உரியவர். -

கலைவாணிப் பதிப்பகத்தின் மற்றுமோர் நல்ல முத்தான இதற்கு மக்களிடையே மாபெரும் வரவேற் பிருக்கும் என்பது திண்ணம்.

சென்னை.14

அன்பன்,
வீ. செ. கந்தசாமி



https://ta.wikisource.org/wiki/%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88_%E0%AE%A8%E0%AE%B2%E0%AE%AE%E0%AF%8D

அணிந்துரை

சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார், தாம் கொண்ட கோலத்திற்கேற்ப தலைசிறந்த ஆன்ம ஞானி. தெய்வ பக்தியோடு, தேச பக்தியும் கொண்டவராதலால் ஆன்மிகத் தோடு அறிவியலையும் கலந்து சிந்திக்க அவரால் முடிகிறது. பற்றுக்கள் பலவற்றை விட்டு துறவியான அடிகள், தமிழ்ப்பற்றை மட்டும் துறக்காதவராகி, தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே தலைமை தாங்க வேண்டுமென்ற கொள்கையுடையவராகி, அதற்காகப் பாடுபட்டும் வருகிறார்.

அடிகளார் பல்வேறு காலங்களில் பல்வேறு அரங்குகளில் வெளியிட்ட கருத்துக்கள் இந்நூல் வடிவம் பெற்று தமிழர் கைக்கு வருகிறது. அடிகளார் 'மெய்யறிவு' நிலையில் மட்டுமல்லாமல், விஞ்ஞான அறிவிலும் தமிழ் தலைசிறந்து விளங்க வேண்டு மென விரும்புகிறார். அதனை பல்வேறு கோணங்களில் நின்று வெளியிட்டு தமிழர்களுக்கு வழிகாட்டுகிறார்.

அறிவியற் கலைகளைப் பயிற்றுவிக்கும் கோயில்களான பல்கலைக் கழகங்களிலே இன்னமும் தமிழுக்கு இடமில்லை. அதாவது, தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களிலே அனைத்துப் பாடங்களிலும் தமிழில் போதிக்குங்கால், தமிழில் அறிவியல் நூல்கள் பெருகும். இந்தக் கொள்கையிலே நாங்கள் ஒன்றுபட்டவர்கள். இ த னை ச் சாதிக்க அரசின் துணை தேவைப்படுகிறது.

அடிகளாரும், நானும் அத்துறையில் ஒன்றுபட இறையருள் கூட்டுவிக்குமாக !

நூலை விரிவாகப் படிக்கப் படிக்க எனது அறிவு விரிவடைகிறது. ஒவ்வொரு தமிழரும் எனது நிலையை அடைய இந்நூல் பயன்படுமாக !

கலைவாணி புத்தகாலயத்தின் உரிமையாளர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் நன்றாகப் பதிப்பித்துள்ளார்.

அடிகளாருக்கு என் மனமுவந்த நன்றி. பதிப்பகத்தாருக்கு என் பாராட்டு.

சென்னை-18

ம. பொ. சிவஞானம்

28-12-92.

பதிப்புரை

உலக மக்கள் அனைவரும் வளமாக, நலமாக வாழ வேண்டும் என்று விரும்புவது இயல்பே. வாழ்வாங்கு வாழவும் மிக உயர்ந்த பிறப்பாகிய மனிதப்பிறப்பின் பயனை பெற்று மகிழ துறைகள் தோறும் உலக மக்கள் பண்பு நலன்களைப் பெற வேண்டும்.

உலக சமுதாயத்தின் மகிழ்வான வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டும் நூல் திருக்குறள்.

ஆன்மாவும், உடலும் போல, அகமும், புறமும் சேர்ந்ததே வாழ்க்கை. ஆன்ம வாழ்வை நெறிப்படுத்துவது ஆன்மிகம். அவ்வகையில் ஆன்மிகம், அறிவியல், அருளியல் முதலியவை இணைந்தும், பிணைந்தும் செயலாற்ற தவத்திரு. அடிகளார் அவர்கள் அனைவரும் வாழ்வாங்கு வாழ திருக்குறள் நெறிமுறைகளை மிகத் தெளிவாக விளக்கி உணர்த்தும் நூலே "வாழ்க்கை நலம்"

இச்சிறந்த நூலினை அளித்தருளும் தவத்திரு அடிகளார் அவர்களுக்கு மக்கட் சமுதாயம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

அணிந்துரை அளித்துள்ள டாக்டர் ம. பொ. சி அவர்கட்கும், 'வாழ்க்கை நலம்' எனும் இந்நூல் அனைவருக்கும் பயன்தர பெரிதும் உதவிய உழுவலன்பு நண்பர் கவிஞர் மரு. பரமகுரு அவர்கட்கும் என் மனமார்ந்த நன்றி.

இச்சிறந்த நூலை அனைவரும் படித்துப் பயன்பெற கலைவாணியின் திருஅருளை வேண்டுகிறேன்.

அன்புடன்,
சென்னை-17
'கலைவாணி' சீனி. திருநாவுக்கரசு
29-12-92.
பதிப்பாசிரியர்

குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

தொகுதி – 1
திருக்குறள்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%95%E0%AF%81%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9F%E0%AE%BF_%E0%AE%85%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%95%E0%AE%B3%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%9A%E0%AF%88_1

உள்ளுறை

குன்றக்குடி அடிகளாரின் 96-வது பிறந்த நாள்!

https://www.hindutamil.in/news/tamilnadu/563876-kurakkudi-adigalar-birth-anniversary.html

சிலைக்கு அமைச்சர் பாஸ்கரன் மாலை அணிவித்து மரியாதை



தவத்திரு குன்றக்குடி பெரிய அடிகளார் தெய்வசிகாமணி அருணாச்சல தேசிக பரமாச்சாரியாரின் 96-வது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி குன்றக்குடியில் அடிகளார் அருளாலய வளாக மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு கதர் மற்றும் கிராமத் தொழில் துறை அமைச்சர் ஜி.பாஸ்கரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் .

இந்த நிகழ்வில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வி.ஜெயகாந்தன், முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் எம்எல்ஏ, முன்னாள் எம்.பி. செந்தில்நாதன், ஆதீனப் புலவர் மரு.பரமகுரு உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். முன்னதாகக் குன்றக்குடி அடிகளார் அருளாலயத்தில் வழிபாடும் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் கரோனா காலத்து மூலிகைத் தேநீர் வழங்கப்பட்டது.

'குன்றக்குடி அடிகள்' என்றழைக்கப்பட்ட குன்றக்குடி பெரிய அடிகளார் (ஜூலை 11, 1925- ஏப்ரல் 15, 1995) சமயம், இலக்கியம், மட்டுமன்றி பேச்சு, எழுத்து, கலை எனப் பல துறைகளிலும் தனித்திறன் கொண்ட ஆளுமையாகத் திகழ்ந்தவர். கிராமங்களையும் தற்சார்பு நிலைக்கு மாற்ற வேண்டும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்த அடிகளார், அதன்படி குன்றக்குடி கிராமத்தை முன்மாதிரிக் கிராமமாக மாற்றிக் காட்டியவர்.

அடிகளாருக்குப் பெற்றோர் வைத்த பெயர் அரங்கநாதன். தருமபுர ஆதீனத்தில் தம்பிரானாக சந்நியாசம் வாங்கிய போது ஆதீன மடம் இவருக்குச் சூட்டிய பெயர் கந்தசாமி தம்பிரான் பரமாச்சாரியார். அதைத் தொடர்ந்து குன்றக்குடி மகா சந்நிதானமாகப் பட்டம் சூட்டிய பொழுது தெய்வசிகாமணி அருணாசலத் தேசிகப் பரமாச்சாரியார் ஆனார்.

பள்ளிப் பருவத்திலேயே தமிழ்ப் பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளையிடம் தினம் ஒரு திருக்குறள் ஒப்பித்துக் காலணா பெறுவது அரங்கநாதரின் வழக்கம். அப்படி அரங்கநாதரின் வாழ்வை உயர்த்திய திருக்குறள், பின்னாளில் அடிகளாரான அவருக்குப் பொதுநெறி ஆகியது. 'உலகத் திருக்குறள் பேரவை' என்னும் அமைப்பைத் தொடங்கிய அடிகளார், திருக்குறளைப் பட்டிதொட்டியெங்கும் கொண்டு சேர்த்து குறளுக்குப் பெருமை சேர்த்தவர். இப்போது தற்போதைய அடிகளார் பொன்னம்பல தேசிகப் பரமாச்சாரியாரின் தலைமையில் செயல்பட்டு வரும் உலகத் திருக்குறள் பேரவை, திருக்குறளுக்குப் பெருமை சேர்க்கும் சேவையைச் செவ்வனே செய்துவருகிறது.

குன்றக்குடி பெரிய அடிகளாருக்குள் தீண்டாமை விலக்கு உணர்வும், மனிதநேயப் பண்பும் வேரூன்றக் காரணமாக இருந்தவர் விபுலானந்த அடிகள். பிற மடாதிபதிகளைப் போல மக்களைவிட்டு ஒதுங்கி மடத்துக்குள் முடங்கி இருக்காமல் மக்களோடு மக்களாய் இருந்து, காவிக்குள் தெய்வீகத்தையும் கருத்தில் பகுத்தறிவும் கொண்ட அற்புதத் துறவியாகத் திகழ்ந்தவர் குன்றக்குடி அடிகளார்.

பல்லக்கு பவனிகளைப் புறந்தள்ளிவிட்டு தன்னந்தனியாகச் சேரிக்குள் சென்று, தீண்டத்தகாதவர்கள் என்று புறம்தள்ளப்பட்டவர்களைக் கண்டு அவர்களின் துயர் துடைத்தவர். மடாதிபதியாக இருந்தபோதும், கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்ட பெரியாருக்கும் அண்ணாவுக்கும் தோழராய் இருந்தவர். பிற்காலத்தில் தமிழக முதல்வர்கள் கருணாநிதி, எம்ஜிஆர் உள்ளிட்டவர்களாலும் ஒரேமாதிரியாக மதிக்கப்பட்டவர். தெய்வப்பணி என்பது மக்களின் சேவைப் பணியே என்பது அடிகளாரின் கொள்கை. தீண்டாமையை எதிர்த்துப் போராடிய அடிகளார், குன்றக்குடி திருமடத்துக்குள் பட்டியலினத்து மக்களையும் அழைத்து அனைவரும் ஒன்றாக அமர்ந்து சமபந்தி போஜனம் செய்ய வைத்தவர். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் பட்டியலினத்து மக்களை வைத்தியநாத ஐயர் அழைத்துச் சென்றபோது, தானும் உடன் சென்றவர் அடிகளார்.

மண்டைக்காடு சாதிக் கலவரத்தில் நவகாளிக் காந்தியாக மாறி, கலவரப் பகுதிக்குள் நுழைந்து அமைதியை நிலைநாட்டியவர். அந்த சமயத்தில் மீனவ மக்களுக்குள் இணக்கமான சூழலை உருவாக்க வேண்டும் என்பதற்காக, தான் ஒரு மடாதிபதி என்ற மரபுகளை எல்லாம் உடைத்து கைகளில் மீன்களை ஏந்தி விற்று அதில் கிடைத்த பணத்தை மீனவர்களுக்குத் தந்து உதவியவர் அடிகளார். துறவுக் கோலத்தில் தூய தமிழ்த் தொண்டராக, சமுதாயப் பணியில் சமூக நீதி காத்த சீலராக, சமூகத்தைச் செதுக்கும் சிற்பியாக விளங்கியவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தெய்வசிகாமணி அருணாச்சல தேசிக பரமாச்சாரியார்.

தமிழக மேலவை உறுப்பினராக இருந்த அடிகளார், 'திருக்குறளைத் தேசியப்படுத்த வேண்டும்' என்று முழங்கியவர். அப்பர் விருந்து, அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர், திருவாசகத்தேன், தமிழமுது உள்ளிட்ட 10 சமய இலக்கிய நூல்களை எழுதியிருக்கும் அடிகளார், திருவள்ளுவர்,

திருவள்ளுவர் காட்டும் அரசியல், சிலம்புநெறி, பாரதிதாசன் உலகம் உள்ளிட்ட 13 இலக்கிய நூல்களையும் எழுதியிருக்கிறார். அருள்நெறி முழக்கம், ஆலயங்கள் சமுதாய மையங்கள், சிலம்பு நெறி உள்ளிட்ட அடிகளார் எழுதிய 28 நூல்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டுள்ளன.

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF_%E0%AE%95%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%95_%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%95%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%95%E0%AF%8B%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர்



பிள்ளையார்பட்டி
கற்பக விநாயகர் கோயிலின் கோபுரம்



ॐ

தமிழ்நாடு-இல் உள்ள இடம்

வரைபடத்தைக் காட்டுக:
தமிழ்நாடுவரைபடத்தைக் காட்டுக:
இந்தியாShow all

அமைவிடம்	
நாடு:	இந்தியா
மாநிலம்:	தமிழ்நாடு
மாவட்டம்:	சிவகங்கை மாவட்டம்
அமைவு:	திருப்பத்தூர்
ஆள்கூறுகள்:	10°07′09″N 78°40′04″E
கோயில் தகவல்கள்	
கட்டிடக்கலையும் பண்பாடும்	
கட்டடக்கலை வடிவமைப்பு:	தமிழர் கட்டடக்கலை
இணையதளம்:	www.pillaiyarpattitemple.com



பிள்ளையார்பட்டி கோயில் கோபுரம்

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில் (ஆங்கிலம்: *Pillaiyarpatti Pillaiyar Temple*) என்பது தமிழ்நாட்டின், சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி நகரிலிருந்து 12 கி.மீ. தொலைவில், பிள்ளையார்பட்டி ஊரில் அமைந்துள்ள ஒரு பிள்ளையார் கோயில் ஆகும்.


அமைவிடம்

இந்த பழமையான குடைவரைக் கோயில் அமைந்துள்ள பிள்ளையார்பட்டி என்ற ஊர், திருப்பத்தூர்- குன்றக்குடிச் சாலையில் திருப்பத்தூரில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது. மேலும், குன்றக்குடி முருகன் கோயிலிருந்து மூன்று கி.மீ. தொலைவிலும், காரைக்குடியிலிருந்து 16 கி.மீ. தொலைவிலும், சிவகங்கையிலிருந்து 47 கி.மீ. தொலைவிலும் உள்ளதால் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகிறார்கள்.

வரலாறு

இங்குள்ள குன்றின் அடிவாரத்தில் கோவில் குடையப்பெற்றுள்ளது. இக்கோவில் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகக் கருதப்படுகிறது. இக்கோயிலின் முதன்மைத் தெய்வமாக கற்பக விநாயகர் இருக்கிறார். மலையைக் குடைந்து அமைக்கப்பெற்ற சுமார் ஆறு அடி உயரமுள்ள கற்பகப் பிள்ளையாரின் உருவம் வடக்குத் திசை பார்த்துக் காணப்படுகிறது. சிவன் உள்ளிட்ட கடவுளர்களின் உருவங்கள் குகைக்கோயிலில் செதுக்கப்பட்டுள்ளன. ஆகமக் கல்வெட்டுக்களில் எழுதியுள்ளபடி இக்கோயில், பொ.ஊ. 1291 மற்றும் 1238ம் ஆண்டின் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது எனக் கருதப்படுகிறது.

தல வரலாறு



விநாயகரின் பொ.ஊ. 7-ம் நூற்றாண்டு பாறைச் (புடைப்புச்) சிற்பம்.

பல்லவர்களுக்கு முன்பே குடைவரைக் கோயில்களை அமைத்த பெருமை முற்கால பாண்டியர்களுக்கு உண்டு. ஏக்காட்டூர் கோன் பெருபரணன் என்கிற சிற்பியால் பிள்ளையாரின் உருவமும், சிவலிங்கத்தின் உருவமும் செதுக்கப்பட்டுள்ள தகவல் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வின்படி மகேந்திரவர்ம பல்லவன் காலத்துக்கும் முன்பு இரண்டு அல்லது ஐந்து நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்தது இந்தக் குடைவரைக் கோயில் என்பதை அறியலாம். பொ.ஊ. நான்காம் நூற்றாண்டில் பிள்ளையார் சிலையை செதுக்கி இருக்கலாம் என்று நம்புகின்றனர். இது போல் 14 சிலை உருவங்கள் இக் கோயிலில் உள்ளன. மேலும், கல்வெட்டுகள் மூலமாக, எருக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைக்குடி, திருவீங்கைச்வரம், இராச நாராயணபுரம், மருதங்கூர், தென்மருதூர், கணேசபுரம், கணேச மாநகரம், பிள்ளைநகர் போன்றவை இத் தலத்தின் முற்காலப் பெயர்கள் என அறிய முடிகிறது.

இந்தக் கோயில் பொ.ஊ. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் செட்டிநாட்டு நகரத்தார்கள் வசமானது என்பது வரலாறு. நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் மேற்பார்வையில் மிகச் சிறப்பான முறையில், ஆகம முறை தவறாமல் வழிபாடு நடைபெறுகிறது. இத்தல கற்பக விநாயகருக்கு தேசி விநாயகர் என்ற பெயரும் உண்டு. தேசி விநாயகர் என்ற பெயருக்கு ஒளிமிக்க, அழகுள்ள விநாயகர் என்று பொருள்.

கோயில் அமைப்பு

கோயிலின் அமைப்பு இருபகுதிகளாக அமைந்திருக்கிறது. கோயிலின் ஒரு பகுதி குடைவரைக் கோயிலாகவும், மற்றொரு பகுதி கற்றளி எனவும்

அமைந்திருக்கிறது. பிள்ளையார்பட்டி கோயில், தமிழ்நாட்டுக் குடைவரைக் கோயில்களில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ஆறு அடி உயரமுள்ள கற்பக விநாயகரின் சன்னதி மலையைக் குடைந்து அமையப்பெற்றுள்ளதால், இங்கு சன்னதியை வலம் வர இயலாது. பிள்ளையாரின் திரு உருவம் வடக்கு நோக்கியும், அவரின் தும்பிக்கை வலது புறமாக சுழித்தும் (வலம்புரி விநாயகர்) இருப்பது இக் கோயிலின் தனிச் சிறப்பாக உள்ளது. இங்கு திருமணம் நடைபெற வைக்கும் "கார்த்தியாயினி" அம்மன் சன்னதியும், பிள்ளை வரமளிக்கும் "நாகலிங்கம்" சுவாமி சன்னதியும், அனைத்து செல்வ வளங்களை அளிக்கும் "பசுபதீசுவரர்" சன்னதியும் உள்ளது.

குடைவரைக் கோயிலினுள் நடுவே கிழக்கு முகமாக அமைக்கப்பட்டிருக்கும் மகாலிங்கம் மிகுந்த பொலிவுடன் காணப்படுகிறது. திருவீசர் எனப்படும் இப்பெருமானுக்கு திருவீங்கைக்குடி மகாதேவர் என்ற பெயரும் உண்டு. சற்று வடக்கில் வெளிப்புறச் சுவரில் லிங்கோத்பவர் காட்சியளிக்கிறார்.

இக் குகைக்கோயிலிலிருந்து சிறிது தொலைவில் கிழக்கு நோக்கிய சந்நிதியாக அமைந்திருக்கிறது மருதீசர் சந்நிதி. சதுர வடிவ கருவறையின் நடுவே வட்ட வடிவமான ஆவுடையார் மீது லிங்க வடிவில் அமைந்துள்ள மருதீசர் அர்ஜுனவனேசர் என்ற பெயரிலும் வழங்கப்படுகிறார். இக் கருவறையைச் சுற்றியுள்ள புறச் சுவர்கள் சிற்பங்கள் எதுவுமின்றி நுட்பமான கட்டட வேலைப்பாடுகளுடன் மிக அழகாகவும் எளிமையாகவும் திகழ்கின்றன. மருதீசர் கோயில் 30 செப்புத் திருமேனிகளைக் கொண்டுள்ளது. காலத்தால் இவை பொ.ஊ. 10-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரையிலானது.

மருதீசர் கோயிலின் மேல்சுற்றுப் பிரகாரத்தின் வடகிழக்குப் பகுதியில் வீற்றிருப்பவர் வாடாமலர் மங்கை. இவருடைய சந்நிதி தெற்கு முகமாகக் காட்சியளிக்கிறது. கருவறை நடுவே அம்மனின் திருஉருவம் பத்ம பீடத்தின் மீது இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. இக் கோயிலின் தலவிருட்சமாக அர்ச்சுனா மரம் உள்ளது. வடக்கு கோபுர வாயிலின் உள்ளே கிழக்குப் பகுதியில் சிவகாமியம்மன் சந்நிதி உள்ளது. மகா மண்டபத்தின் வடக்குப் பகுதியில் நடராசர் சபையுள்ளது. அலங்கார மண்டபத்தில் வரையப்பட்டிருக்கும் ஓவியங்கள் ஓவியக்கலைக்குப் பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளன. இக் கோயில் சிவன் கோயிலாக இருந்தாலும் கற்பக

விநாயகரால் மக்களிடையே புகழ் பெற்று பிள்ளையார்பட்டி பிள்ளையார் கோயில் என்றே அழைக்கப்படுகிறது.

ராஜகோபுரம்

கோயில் மதிலின் கிழக்கு வாயிலில் ராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. ஏழு நிலைகளுடன் அமைந்த இக்கோபுரம் அதிட்டானம் முதல் கல்லாரம் வரை வெள்ளைக் கல்லாலும் அதற்கு மேற்பட்ட பகுதிகள் செங்கல், சுதை கொண்டும் எழுப்பப்பட்டுள்ளது. கற்பக விநாயகர் சந்நிதியின் முன்புறமாக இருக்கும் மதிலின் வடக்கு வாயிலில் விநாயகக் கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது. இது மூன்று நிலைகளுடன் காணப்படுகிறது. இக்கோபுரம் அதிட்டானம் முதல் கல்லாரம் வரை வெள்ளைக் கற்களைக் கொண்டும் அதன் மேல் எழுப்பப்பட்டுள்ள கோபுரத் தளங்கள் செங்கல்லைக் கொண்டும் எழுப்பப்பட்டிருக்கிறது.

திருக்குளம்



கோயிலின் மண்டபம்

விநாயகர் கோபுரத்திற்கு எதிரே வெளி நடையின் வட திசையில் பரந்து அமைந்த திருக்குளம் உள்ளது. பிள்ளையார்பட்டியில் ஒவ்வொரு சதுர்த்தியின்போதும் இரவு நேரத்தில் விநாயகர் மூஷிக வாகனத்தில் எழுந்தருளி கோயில் உட்பிரகாரத்தில் வலம் வருவார்.

முக்கிய திருவிழாக்கள்

இத் தலத்தில் விநாயகர் சதுர்த்தி விழா பத்து நாட்களுக்கு கொண்டாடப்படும் பெருவிழாவாக உள்ளது. முதல் நாள் விழா கோயில் கொடியேற்றத்துடன்

தொடங்குகிறது. அதைத் தொடர்ந்து "காப்பு கட்டுதல்" மற்றும் விழா தொடர்பான நிகழ்வுகள் தினமும் நடைபெறுகின்றன. இரண்டாம் நாளில் இருந்து எட்டாம் நாள் வரை பிள்ளையார் பல்வேறு வாகனங்களில் வலம் வருவார். ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழா மிக விமரிசையாக நடைபெறும். அன்றைய நாள் பிள்ளையாருக்கு "சந்தன காப்பு" அலங்காரம் செய்யப்படுகிறது. இந் நிகழ்ச்சி பக்தர்களிடையே மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. பத்தாம் நாள் காலையில் தீர்த்தவாரி நிகழும். மேலும், கார்த்திகை மாதத்தில் "திருக்கார்த்திகை தீபத் திருவிழா", மார்கழி மாத திருவாதிரை நாளன்று சிவகாமசுந்தரி உடன் வீற்றிருக்கும் நடராஜப் பெருமான் திருவீதி உலா வருதல், தமிழ் மற்றும் ஆங்கில புத்தாண்டு நாட்களில் சிறப்பு வழிபாடுகள் போன்றவை நடைபெறுகின்றன.

நேர்த்திக் கடன்



கோயிலில் அமைந்துள்ள திருக்குளம்

இக் கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்கள் வேண்டுகோள் நிறைவேறியதும், இத் தலத்தில் உள்ள பிள்ளையாருக்கு, முக்குறுணி மோதகம் (கொழுக்கட்டை) படைத்து வழிபடுகிறார்கள். தொழில் வளர்ச்சி வேண்டுவோர் இத்தலத்தில் கணபதி ஓமம் செய்து பயனடைகிறார்கள். மேலும் அருகம்புல் மாலை அணிவித்து வழிபாடு செய்து தங்கள் நேர்த்திக் கடனைச் செலுத்துகிறார்கள்.

காணொளிகள்

01] Pillayarpatti * Karpaga Vinayagar

https://www.youtube.com/watch?v=HlN-pt_A_lk[11:34]

These people are also called as 'Dhana Vanigar',who have resided at Karaikudi and it's surroundings, which is in Sivaganga district of Tamil Nadu, India. They have created nine temples for them and based on the nativity of the temples,they divided themselves as divisions and make allaiance only in between them.Those nine temples are as follows :-

1. Mathur Temple
2. Nemam Temple
3. Pillayarpatti Temple
4. Eraniyur Temple
5. Vairavanpatti Temple
6. Elayattrumkudi Temple
7. Iluppaikudi Temple
8. Ariyakudi Temple
9. Velangudi Temple

Out of these 9 temples,Pillayarpatti temple has been very old temple. Lord Vinayagar has been praised as the first - worship god as well the presiding deity. Other names of this place had been Erukkattur, Marutharikudi ,Thiruveengaikudi, ThiruveengaikaramRajanarayanapuram,Marutharikur,ThenMaruthur and Pillai Nagar etc. Here the presiding deity has been called as Karpaga Vinayagar. He is also called as Dhesi Vinayagar, Karpagamurthy,Varatha Ganapathy.Karpa Kandru, Ganesapuresan ,Maruthangurarasu and Maruthangur Eesan etc.

This temple is a rock cut temple of having held the heritage of 2500 years of age. It's curved in a monolithic stone and the presiding deity lord 'Deshi Vinayagar' (now as Karpaga Vinayagar) and the Linga called as 'Thiruveesar', lord Sankara Narayanar Who is in standing posture, had been sculptured within it,as rock cut formation.As for evidence,there have been 14 inscriptions found on the right hand side wall of the shrine of the lord 'Thiruveesar'. At the year of 1284 only, the temple had been handed over to the 'Nagarathaars'.These inscriptions belonged to B.C. 500 to A.D 1284 as told.


One more evidence regarding the antiquity of the presiding deity lord Karpaga Vinayagar had been the signature of the sirpi, the architect who had sculptured that rock cut forms. He had sculptured his signature as 'Ekkatur kon peruparanan' alias Perunthachan in the format of Tamil 'Vari vadiva eluthu', once which had been used on A.D.500. But at that time, this Vinayagar had been called as 'Deshi Vinayagar' and later on, only after 1284, He has been called as Karpaga Vinayagar, since He has been like 'Karpa Virutcham' which is a heavenly tree which could yield anything we want.

There are only two idols of lord Vinayagar found with two hands, one in here Pillayarpatti and the other one at 'Afganisthan'.Butin Afghanisthan,that lord Vinayagar is in standing posture,having worn a lot of jewels.But here in Pillayarpatti,He is in sitting position,called as 'Half pathmasana',otherwise called as 'meditation'.In this posture,He is keeping the 'Shiva Linga' at his right hand, instead the 'Mothagam' (sweet pan cake). Again His trunk has been tilted towards right and hence He has been called as Valampuri Vinayagar.

It's the grand festival celebrated here for 10 days. 9 Days, before this Chathurthi festival, the function has been started with having tied the 'Kaappu' (holy thread) and flag hoisted. The 1st day, the processional deity of Karpaga Vinayagar comes on His transcendental carrier of 'Moosik' (large rat - Bandicoot). The 2nd day, He comes on the carrier lion.The 3rd day, He comes on the carrier 'Bootha'.The 4th day,He comes on the carrier 'Lotus'.The 5th day,He comes on the carrier 'Silver Bull'.The 6th day,He comes on the carrier silver 'Elephant' and Golden 'Moosik', the golden Bandicoot. The 7th day, He comes on the carrier silver 'Peacock'. The 8th day, He comes on the carrier 'Horse'.The 9th day, He circumambulates in the temple car. As He killed the demon 'Gajamugasuran', the 6th day, He comes on double carriers of silver elephant and golden bandicoot. On the 10th day of this festival,at morning there has happened the 'Theertha Peru Vizhaa',a holy water festival.On this day, the processional deities of other gods also circumambulate the street around. It's good to follow the viratham of Chathurthi, coming on every month, esspecially on 'Snagadaghara Chathurthi'.

02] குன்றக்குடி அடிகளாரின் கதை

https://www.youtube.com/watch?v=t1Ajm7BrWGQ [20:42]



குன்றக்குடி அடிகளார்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

Author: கிருங்கை சேதுபதி

Publisher: சாகித்திய அகாடெமி

No. of pages: 144

சைவ சமய மடங்கள்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%9A%E0%AF%88%E0%AE%B5_%E0%AE%9A%E0%AE%AE%E0%AE%AF_%E0%AE%AE%E0%AE%9F%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D

சைவ சமய மடங்கள் அல்லது **சைவ ஆதீனம்** என்பவை சைவ சித்தாந்தத்தை வளர்க்கும் நோக்கத்துடன் தோற்றுவிக்கப்பட்ட மடாலயங்கள் ஆகும். இத்தகைய பல மடங்கள் 16-ஆம் நூற்றாண்டு முதல் தோன்றி வளர்ந்தன.

சொல் விளக்கம்

- மடம் என்பது ஆசாரியர் வாழ்ந்த இடம்.
- ஆதீனம் - தலைமையாய் இருந்து பல கோயில்களையும், சீடர்களையும் கொண்டுள்ள அமைப்பு.
- ஞானபீடம் - அறிவு வழங்கும் மேடை, அறிவுக்களம்

மடத்து ஞானபீடங்கள்

- திருவாவடுதுறை ஆதீனம்

சித்தர் சிவபிரகாசரின் மாணாக்கர் நமச்சிவாயர் 14-ஆம் நூற்றாண்டில் இதனைத் தோற்றுவித்தார்.

- காஞ்சி ஞானப்பிரகாசர் மடம்

சீர்காழி சிற்றம்பல நாடிகள் என்பவரின் மாணாக்கர் 14-ஆம் நூற்றாண்டில் இதனைத் தோற்றுவித்தார்.

- திருவையாறு செப்பறை மடம் என்னும் பீடம்

இதனை மச்சுச் செட்டியார் என்னும் மச்சுக்கறை வணிக யோகி திருவையாற்றில் நிறுவினார். இந்தச் செட்டியார், சந்திரசேகரன் என்னும் பிராமணனுக்கு ஞானம் வழங்கியவர். இந்தச் சந்திரசேகரன் வழியில் திருவையாறு சாமிநாத தேசிகர் முதலான 15 ஆசாரியர் தலைமை பூண்டு ஒரு பீடம் (அறக்கட்டளை) நிறுவி மடத்தைப் பேணிவந்தனர்.
இவர்களில் சந்திரசேகரன் தவிர பிறர் இல்லறம் பேணிய வேளாளர்கள்.

இந்த ஒரு மடத்தைத் தவிர பிற மடங்கள் (ஆதீனம், பீடம்) துறவு பூண்டவர்களையே தலைவர்களாகக் கொண்டிருந்தன

- வேளாக்குறிச்சி மடம்

பழுதைக்கட்டி சம்பந்த முனிவர் அவரிடம் உபதேசம் பெற்றவர் காவை அம்பலநாத சுவாமிகளாவர். காவை அம்பலநாத சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர் சத்திய ஞான பண்டாரம். இவர்களின் தீட்சா நாமம் சத்திய ஞானதேசிக தீர்க்கதரிசினிகள். இவர்கள் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வேளை நகர் எனும் வேளாக்குறிச்சியில் தாமிரவருணி நதிக்கரையில் வேளாக்குறிச்சி ஆதீனத்தை நிறுவியவர்கள்

- தருமை ஆதீனம்

சிற்றம்பல நாடிகள்பரம்பரையில் 5-ஆவது சீடர் கமலை (சீர்காழி) ஞானப்பிரகாசர் . கமலை ஞானப் பிரகாசரின் மாணாக்கர் குருஞான சம்பந்தர் தருமபுர ஆதீனத்தை 16-ஆம் நூற்றாண்டில் தோற்றுவித்தார்.

- காசித்திருமடம், திருப்பனந்தாள்

காசித்திருமடம் குமரகுருபரர் அவர்களால் முதலில் காசி நகரில் துவங்கப்பட்டது. திருப்பனந்தாளில் அதன் கிளைமடம் 1720ல் நிறுவப்பட்டது. நாளைடைவில் திருப்பனந்தாளில் இருந்த கிளைமடம் தலைமையிடமாக மாறிற்று

- துழாவூர் மடம்

கமலை ஞானப்பிரகாசரின் மற்றொரு மாணாக்கர் நிரம்ப அழகிய தேசிகர் இந்த மடத்தைத் தோற்றுவித்தார்.

- தருமை ஆதீனம்
- தருமபுர ஆதீன பரம்பரை
- திருவாவடுதுறை ஆதீனம்
- திருவாவடுதுறை ஆதீன பரம்பரை
- மதுரை ஆதீனம்
- மயிலம் பொம்மபுர ஆதீனம்
- வேளாக்குறிச்சி ஆதீனம்
- திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி
- சூரியனார்கோயில் ஆதினம், சூரியனார்கோயில்
- தொண்டைமண்டல ஆதினம், காஞ்சிபுரம்

- செங்கோல் ஆதினம், பெருங்குளம்
- நாச்சியார்கோவில் ஆதீனம், நாச்சியார்கோவில்
- வரணி ஆதீனம், வேதாரண்யம்
- வள்ளலார் ஆதினம், சீர்காழி
- சொர்க்கப்புர ஆதீனம், அம்பர்மாகாளம்
- ஆகமசிவப்பிரகாசர் ஆதீனம், சிதம்பரம்
- தாயுமானவ ஸ்வாமிகள் ஆதினம், அன்னப்பன்பேட்டை
- நீலப்படி ஆதினம்
- இராமேச்சர ஆதினம்
- கோவிலூர் ஆதீனம்

குன்றக்குடி அடிகளார்

https://www.hindutamil.in/news/blogs/228050-10.html

ஆன்மிகத் தலைவர், தமிழறிஞர்

சமயப் பணியையும் தமிழ்மொழி வளர்ச்சியையும் இரு கண்களாகக் கொண்டு அருந்தொண்டாற்றிய குன்றக்குடி அடிகளார் பிறந்த தினம் இன்று (ஜூலை 11). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

* மயிலாடுதுறையை அடுத்த நடுத்திட்டு என்ற கிராமத்தில் பிறந்தார் (1925). இவரது இயற்பெயர் அரங்கநாதன். சிறு வயதில் சிதம்பரத்தை அடுத்த திருவேட்களம் என்ற ஊரில் வாழ்ந்து வந்தபோது, தமிழறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளையிடம் தினமும் ஒரு திருக்குறளை ஒப்புவித்து சிறுவர்கள் காலணா பெற்றுச் செல்வார்கள்.

* இவரும் அவ்வாறே ஒப்புவித்து வந்தார். இதனால் திருக்குறள் பற்றும் தமிழில் ஆர்வமும் பிறந்தது. இளம்பருவத்தில் விபுலானந்தருடன் இணைந்து தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்கள் உட்பட பல போராட்டங்களில் கலந்துகொண்டார்.

* பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் தருமபுரம் ஆதீனத்தில் கணக்கராக வேலைக்குச் சேர்ந்தார். இவரது ஆற்றலைக் கண்ட அங்கிருந்த தம்பிரான் இவரைத் துறவறம் பூணுமாறு அறிவுறுத்தினார். சிறுவயது முதலே சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்த இவரும் உடனடியாக சம்மதித்தார்.

* 1945-ல் துறவறம் பூண்டு தருமபுரம் சைவ மடத்தில் துறவியாக இணைந்தார். 'கந்தசாமித் தம்பிரான்' என அழைக்கப்பட்டார். சைவ சித்தாந்தங்கள் தொடர்பான அனைத்தையும் பயின்றார். பல்வேறு சமயப் பணிகளுடன் சொற்பொழிவு ஆற்றியும் வந்தார்.

* பட்டிமன்றம் என்பதை ஆக்கபூர்வமாக, எளிய மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் பயன்படுத்தினார். திருவண்ணாமலை சைவ மடத்தின் ஆதீனப் பொறுப்பு இவரை நாடி வந்தது. அப்போது 'தெய்வசிகாமணி அருணாச்சல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்' என்ற பெயர் இவருக்கு சூட்டப்பட்டது. 1949-ம் ஆண்டு குன்றக்குடி மடத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னர் 'குன்றக்குடி அடிகளார்' என்று நேசத்துடன் அழைக்கப்பட்டார்.

* 1952-ல் சமயச் சான்றோர்கள், தமிழறிஞர்களை ஒன்றுதிரட்டி பெரிய மாநாடு ஒன்றை நடத்தினார். அதன் விளைவாக 'அருள்நெறித் திருக்கூட்டம்' என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. இதன் செயலாக்கப் பிரிவாக 'அருள்நெறித் திருப்பணி மன்றம்' என்ற அமைப்பும் தொடங்கப்பட்டது.

* சமயப் பணிகளை மட்டுமல்லாமல் சமூக ஏற்றத் தாழ்வுகளைப் போக்கும் சீர்திருத்தப் பணிகளையும் மேற்கொண்டார். ஆதி திராவிடர்களை கோவில்களுக்குள் அனுமதித்தார். சமஸ்கிருத வேத மந்திரங்களுக்குப் பதிலாக தமிழில் வழிபாடு, பூஜைகள் நடத்த வலியுறுத்தினார்,

* இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டார். 1967-ல் மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மணிமொழி, தமிழகம், அருளோசை, மக்கள் சிந்தனை, அறிக அறிவியல் முதலிய இதழ் களையும் நடத்தி வந்தார். திருக்குறள் தொடர்பான இவரது படைப்பு கள், திருக்குறளின் ஆழத்தையும், செறிவையும் பிரதிபலித்தன. 'திருவள்ளுவர்', 'திருவள்ளுவர் காட்டும் அரசியல்', 'குறட்செல்வம்', 'திருக்குறள் பேசுகிறது' உள்ளிட்ட நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

* 'அப்பர் விருந்து', 'தமிழமுது', 'திருவாசகத்தேன்', 'நாயன்மார் அடிச்சுவட்டில்', 'நமது நிலையில் சமயம் சமுதாயம்', 'திருவருட்சிந்தனை', 'நாள் வழிபாட்டுக்குரிய தினசரி தியான நூல்' உள்ளிட்ட பல சமய நூல்களையும், 'சிலம்பு நெறி', 'கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம்', 'பாரதி யுக சாந்தி' உள்ளிட்ட பல இலக்கிய நூல்களையும் எழுதியுள்ளார்.

* கிராமப் பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 1972-ல் குன்றக்குடி கிராமத் திட்டத்தைத் தொடங்கினார். வெளி நாடுகளில் தமிழகத்தின் பண்பாட்டுத் தூதராகப் போற்றப்பட்டார். தலைசிறந்த சமூக சீர்திருத்தவாதியாகச் செயல்பட்ட ஆன்மிகத் தலைவரான குன்றக்குடி அடிகளார் 1995-ம் ஆண்டு 70-வது வயதில் மறைந்தார்.

தமிழ் அறிஞர்கள் நாள்

செப்டம்பர் 27, 2025

https://tan.chicagotamilsangam.org/KundrakudiAdigalar/



குன்றக்குடி அடிகளார் (1925 – 1995)

அறிமுகம்

குன்றக்குடி அடிகள் (11 சூலை 1925 - 15 ஏப்ரல் 1995) சமயம், இலக்கியம், மட்டுமன்றி பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர். குன்றக்குடி ஆதீனத்தின் மடாதிபதியாக இருந்தவர்.

பேச்சுக்கு நிகராக, எழுத்திலும் வல்லவரான அடிகளார், தம் வாழ்நாளில் ஏராளமான நூல்களை எழுதியதோடு, மணிமொழி, தமிழகம், அருளோசை முதலிய இதழ்களையும் நடத்தினார். அவர் ஆரம்பித்து, இன்றளவும்

வந்துகொண்டிருக்கும் மக்கள் சிந்தனை, அறிக அறிவியல் ஆகிய இதழ்களும் குறிப்பிடத்தக்கன.

விருதுகள்

- தமிழ்நாடு அரசின் முதல் திருவள்ளுவர் விருது 1986ல் வழங்கப்பட்டது.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் (D.Litt) 1989ல் வழங்கிச் சிறப்பித்தது.
- இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக்குழு, 1991ல் தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.

** எழுதிய நூல்கள் **

** சமய இலக்கியங்கள் **

அப்பர் விருந்து, அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர், திருவாசகத்தேன் தமிழமுது, சமய இலக்கியங்கள், நாயன்மார் அடிச்சுவட்டில், ஆலய சமுதாய மையங்கள் (தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது), நமது நிலையில் சமயம் சமுதாயம், திருவருட்சிந்தனை, தினசரி தியான நூல், குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை 16 தொகுதிகள்

** இலக்கியங்கள் ** திருவள்ளுவர், திருவள்ளுவர் காட்டும் அரசியல், திருவள்ளுவர் காட்டும் அரசு, குறட்செல்வம், வாக்காளர்களுக்கு வள்ளுவர் தொடர்பான அறிவுரை, திருக்குறள் பேசுகிறது, குறள்நூறு, சிலம்பு நெறி, கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம், பாரதி யுக சந்தி, பாரதிதாசனின் உலகம், கவியரங்கில் அடிகளார் (கவிதைகள்), மண்ணும் மனிதர்களும் (தன்வரலாறு) அடிகளார் எழுதிய சிறுகதைகள், அறிவொளி இயக்கத்தின் மூலமாக மக்களைச் சென்றெய்தியது. சில நாடகங்களும் அடிகளாரால் எழுதப்பெற்று அரங்கேறியுள்ளன. அவரது இறுதிக்காலத்தில் தினமணியில் எங்கே போகிறோம்? என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதி வந்தார்.